பாகூ

பிஸ்மில்லாகிற்றஹ்மானிற் றஹீம்.

இதனுள்

அஞ்ஞானயிருளை னீக்கும்

மெய்ஞ்ஞானத்

தங்கப்பாட்டு மாலை.

ஷிபாமாலை

முனாஜாத்துபதிகங்கள் சேர்ந்திருக்கின்றன.

இஃது

கோட்டாறு

காமிலுஷ்ஷைகூது அல் ஆரிபுல் உஜூது

ஹலறத்து செய்குபாவா செய்கு சுலைமானுல்

காதிரிய்யி சாஹிபவர்களாலியற்றியது.

இஃது

டையூர்

மகாகனம்-மகுதூம் பாவாகாசீம் தரகனு ரவர்கள் குமாரன்

வா-மு-முஹம்மதுயூசுபு லெப்பை

அவர்களால்

சென்னை

அமரிக்கன் டைமெண்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரிஹு 1334 ஈசவி 1916.

ரிஜீஸ்டர் காப்பிரைட்.

OFFICE OF THE REGISTRAR
19 JUL 1916
MADRAS

QT:417
N16
18642

ரிஜிஸ்டர் அறிவிட்

இதனால் சகல கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இந்த மெய்ஞ்ஞான தங்கப்பாட்டுமாலை ஷிபாமாலை முனாஜாத்து பதிகங்கள் முதலியவைகளை இயற்றிய ஹலறத்து செய்குபாவா செய்கு சுலைமானுல் காதிரிய்யி சாஹிபவர்கள் இந்நூலை அச்சிடவும் ரிஜீஸ்டர் விற்பனை முதலிய விஷயங்களுக்கும் அனுமதி கொடுத்திருப்பதனால் இந்நூலை சுத்தமான பிறுதி தெளிவான பதிப்பில் அச்சிட்டு இங்கிலீஷ் லாக்காவிலும் பிரஞ்சிலாக்காவிலும், நாம் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இந்நூலையாவது இதில் சிலதையாவது இத்தமிழ் பாஷையிலோ அல்லது வேறுபாஷைகளில் மொழிபெயர்த்தாவது எமதனுமதியில்லாமல் ஒருவரும் அச்சிடலாகாது. எமதனுமதியில்லாமல் அப்படி யெவராகிலும் அச்சிடுவார்களேயானால் அதனால் யேற்படும் சகலநஷ்டத்தையும் கனம்பொருந்திய கெவர்மெண்டு மூலமாக அச்சிடுபவர்களிடமிருந்து கட்டி வாங்கப்படும்.

இங்ஙனம்,

மகுதூம் பாவாகாசிம் தரகனாரவர்கள் புதல்வன்

வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை.

கோட்டாறு.

இந்த புத்தகம் தேவையானவர்கள் கீழ்காணும் விலாசங்களுக்கெழுதினால் கிடைக்கும்.

இந்நூலியற்றிய ஹலறத்து செய்குபாவா செய்குசுலைமானுல் காதிரி சாஹிபவர்களிடமும்,

௸ சாஹிபவர்களின் முரீதீங்களாகிய
கண்டி கலிபா அருள்வாக்கி வித்வதீபமிடத்திலும்,

உக்குவளை-கு-மு-இடத்திலும் கண்டியை அடுத்தபட்டி யாமம்
மு. அஹ்மது லெப்பை இடத்திலும்,

ஆசிரியரவர்களின் முரீதீங்களிடமும் பெற்றுக்கொ

யாகூ

பிஸ்மில்லாகிற்றஹ்மானிற் றஹீம்.

அஞ்ஞான மிருளை நீக்கும்

மெஞ்ஞானத்

தங்கப்பாட்டுமாலையும்.

சிபாமாலையும்,

சேர்ந்திருக்கிறது.

இஃது

கோட்டாறு

மெஞ்ஞானகுரு அல் ஆரிபுபில்லாகி காமிலொலியுல்லா

ஆரிபுல் உஜூது காமிலுச்சுகூது மவுலானாசெய்கு

முஹியித்தீனுல் காதிரிசாஹிபவர்கள் புத்திரசிகாமணியும்

ரெத்தின வாறுதியுமாகிய

காமிலுச்சுகூது அல் ஆரிபுல் உஜூது

ஹலரத்து செய்குபாவா செய்கு

சுலைமானுல் காதிரிய்யி சாகிபவர்களா லியற்றியது.

இஃது

ஷெடியூர் பெருமாள் குளந்தெருவு

மகாகனம்-மகுதூம் பாவாகாசீம் தரகனா ரவர்கள் குமாரர்

வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை

அவர்களால்

சென்னை,

அமரிக்கன் டைமென்ட் பிரசில் பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜ்ரி 1334 ஈசவி 1916.

ரிஜிஸ்டர்.

OFFICE OF THE REGISTRAR
JUL 191
MADRAS

பிஸ்மில்லாகி.

சாத்துக் கவிகள்.

கோட்டாறு மஹா வித்துவான் சதாவதானி

தேவாமுர்தப் பிரசங்கக் களஞ்சியம்

ஸ்ரீலஸ்ரீ;கா-ப-செய்கு தம்பிப் பாவலரவர்கள் இயற்றிய

நேரிசை யாசிரியப்பா.

ஒன்றே பலவென் றேதற் கரிதாய்
நின்றேயாவும் நிறைந்த மெய்ப் பொருளி
னுதித்தெவ் வுலகு மோங்கைபி னுண்டு
கதித்தென் னுள்ளக் கமல மலரத்
தங்கிய நாயகந் தாசீ மிறசூல்
துங்கக் கமலத் துணையடி சிரசிற்
சூட்டி யிதயந் துலங்குநல் லுணர்வைக்
கூட்டி யொன்றுய்க் குவலயங் களிப்பத்
தங்கப் பாட்டென தந்தன னெருநூல்
லிங்கவ னெவனே யென்னி லிசைக்குதும்
வானுறு மெழிலி மகிழ்வொடு மடையெனத்
தானுறு பொழிற்பல தண்ணிய வயற்பல
குளம்பல நதிபல குடிபல நிதிபல
வளம்பல வொன்றுய் வதியுநற் கோடைப்
பதியி லெவர்க்கும் பதியென் ஞான்றுந்
துதிகொள நின்ற துரைய பூபக்கர்
செய்தவத் துதித்த ஷெய்கு ஐதுரூசாங்
கைதவ மகன்ற காவலர் புதல்வர்
ஷெய்கு முகியித்தீன் செம்ம லினிதருள்
ஷெய்கு பாவா ஷெய்கு சுலையுமா
னென்ன வுலகி லியற் பெயர்
மன்ன வந்த மகிமை யோனே

இந்தச் செய்யு ளாசிரியரவர்களின் மூந் தந்தையாகிய ஹலரத்து மவுலானு அல் ஆரிபு பில்லாகி காமி லொலியுல்லா ஹாஜ்ஜி செய்கு முஹம்மதுல் காதிரியவர்கள் புத்திரசிகாமணியும் இஷெ ஆசிரியரவர்களின் தந்தையின் கலீபாவுமாகிய பிறசங்கக் களஞ்சியம் ஹலறத்து மவுலானு ஹாஜ்ஜி செய்கு ஐதறூ சுல்காதிரி ஆலிம் சாகிபவர்களா லியற்றிய

அறுசீர்களில் நேடிலடி யாசிரிய விருத்தம்.

எட்டு ரண்டி னின்னவை யிடைவிடா துண்டுகண்டு
அட்டு பாகமு தைமிக்க வருஞ் சுவைஞான னூல்கள்
கட்டுரை செய்கு சுலைமான் காதிரி கருத்தை மிக்கோர்
கட்டுதர்க் கரிதுவெங்கு மிலங்கிடு னூலிதாமே

சாத்துக்கவி.

இராமனுதபுரம் ஜில்லா, திருப்புத்தூர் இலக்கண
உபாத்தியாயர்-ஸ்ரீமத்-மகுமூது முத்துபாவாப் புலவ
ரவர்களின் பிரதம மாணுக்கரும் ஷெயூர் ஆ-பி-அல்லா
பிச்சை ருவுத்த ரவர்கள் குமாரரும் இன்னூ
லாசிரியரது தீட்சாவரு மாகிய
வித்துவ தீபம் அருள்வாக்கி

அப்துல்காதிறுப் புலவரவர்கள்

இயற்றிய

நேரிசைக் கட்டளைக் கலிப்பா.

அங்கப்பாதகம் யாவையு மோட்டிநேர்
அருளின்வீட்டி லடைந்திட வேசெலுஞ்
சங்கப்பாவலர் தம்முடனே நிதஞ்
சார்ந்திருக்கத் தயைதருந் தப்பிதப்
பங்கப்பா வக்களையற நீக்கிடும்
பரமஞானி செய்குசுலையுமான் சொன்ன
தங்கப்பாவை யுணர்ந்ததின் சீர்மையைத்
தத்தமுள்ளத் தமைப்பவர் தங்கட்கே. 1

இன்னசீர்த் தங்கப்பாடல்சி பாமாலை
எங்குநம் மவரேற்றிப் புகழ்ந்திட
நன்னர்மே வெழுதா வெழுத்திற்செய்து
நாட்டினுன்புகழ் யாரெனிற் கோடையூர்
மன்னன்பாவா காசீன்தரகன் பெற்ற
வரகுமாரன் முகம்மது யூசுபு
பன்னலத்தின் மகாவேத பாரகன்
பாரிமக்கள் பலன்பெற வாழியே. 2

வெண்பா.

அங்கப்பாட்டெல்லா மறிந்துணர்ந்து மெஞ்ஞானத்
தங்கப்பாட்டென்றி தனைச்சாற்றினரா—லெங்கட்கீர்
கண்மணியார்செய்கு சுலைமான் காதிரிவானின்
விண்மணிபோற் கண்டுகொள்வார் மெய்.

முற்றிற்று.

பிஸ் மில்லாகி

மெய்ஞ்ஞானத் தங்கப்பாட்டு மாலை.

காப்பு.

திரு விருத்தம்.

அவ்வலஹறதானபொருள் ஆகிறஹ்மதுவாய்
எவ்வுயிர்க்குங்கருவான ஹூவ்வதுவுங்காப்பாமே. 1
ஹூவ்வெங்கனும்நிறைந்து குதுறத்தருள்புரியுங்
கோமான்முகம்மதெங்கள் குருபாதங்காப்பாமே. 2
குருவாயுதித்துலகில் குன்பொருளெனக்கருளுந்
திருவேயுருமுஹியித் தீன்பாதங்காப்பாமே. 3

வேறு.

ஆதிவடிவானபொருள் ஆலமெங்குமேனிறைந்து
சோதிவடிவாகிநின்ற சோபதருமாப்பொருளை
நீதிமிகுமெங்குரு நினைத்தபொழுதேயருளும்
வேதியகருப்பொருளை விளம்பவருள்புரிவாய். 4

வேறு.

அருள்புரிந்து கிருபைசெய்யும் ஆலம்படைத் தாள்பவா
பொருளதான பூரணத்தைப் பூவுலகி லருளிட
சுருளதான சூட்சமேவு சுந்தரப் பொருளதை
இருளிருந்த வின்பொரு ளிசைக்கவரு ளிறையவா. 5

வேறு சந்தம்.

அல்கம்துலில்லாகி ஆதம்மொழிந்த பொருள்
அறுநான்கி னகமியம்பார் கட்டித்தங்கமே
அறுநான்கி னகமியம்பார் 6

முன்னில்நிதம்பார்க்க, முதலோன் மணிவிளக்கு
என்னில் துலங்குதுபார் கட்டித்தங்கமே
என்னில் துலங்குதுபார் 7

தொன்னூற்றுமின் சூட்சம் தன்னில்தெளிந்த பின்பு
தலைவன் தெரியுதுபார் கட்டித்தங்கமே
தலைவன் தெரியுதுபார் 8

என்னையறியாமல் எங் குருவைக்காணாமல்
எங்கியலைந் தழுதேன் கட்டித்தங்கமே
எங்கியலைந் தழுதேன் 9

தன்னையறிந்தபின்பு தலைவன் தனையறிந்தேன்
என்று மழியாதுபார் கட்டித்தங்கமே
என்று மழியாதுபார் 10

வன்னத்திருவடியை என்னென்று சொல்லுவேன்
வாய்கொண்டு சொல்லாமல்பார் கட்டித்தங்கமே
வாய்கொண்டு சொல்லாமல்பார் 11

வஞ்சகமெல்லாம்நீக்கி அஞ்சதனையேநோக்கி
துஞ்சமுன்னே துஞ்சிப்பார் கட்டித்தங்கமே
துஞ்சமுன்னே துஞ்சிப்பார் 12

கஞ்சாவுடன்கள் ளரக்கை யருந்தாது
எண்சாண்பனங்கள் ளுண்பாய் கட்டித்தங்கமே
எண்சாண்பனங்கள் ளுண்பாய் 13

நெஞ்சந்தெளிந்து நெடும்பொருளைப்பணிந்து
நேரில் தெரியுதுபார் கட்டித்தங்கமே
நேரில் தெரியுதுபார் 14

தஞ்சாவூர்சென்று தனிராஜனைக்கண்டு
அஞ்சாதே என்கிறான்பார் கட்டித்தங்கமே
அஞ்சாதே என்கிறான்பார் 15

பாயில்லாக்கப்பல் பதினான்கறை கடந்து
காயற்பதி செல்லுதுபார் கட்டித்தங்கமே
காயற்பதி செல்லுதுபார் 16

காயற்பதிசென்று கரைமீதினில் நின்று
கண்டசரக் கேற்றுதுபார் கட்டித்தங்கமே
கண்டசரக் கேம்றுதுபார் 17

காயாபுரிக்கோட்டை செல்லவே காவலுடன்
கணக்கஞ்சு பேர்களைப்பார் கட்டித்தங்கமே
கணக்கஞ்சு பேர்களைப்பார் 18

நாலாறுமேலாலே ஓடியகப்ப லிராறு
காலால் நடக்குதுபார் கட்டித்தங்கமே
காலால் நடக்குதுபார் 19

பார்க்கப்பலவிதமாய் பந்தாட்டமா யாடும்
காக்குங் கருநிலைபார் கட்டித்தங்கமே
காக்குங் கருநிலைபார் 20

சோற்றுலெடுத்தசுவர் காற்றுல் நிறுத்திவைத்து
பார்த்தால் தெரியுதுபார் கட்டித்தங்கமே
பார்த்தால் தெரியுதுபார் 21

அண்ணுக்கடியில் அயின்கல்மா மூட்ட
கண்ணுல் தெரியுதுபார் கட்டித்தங்கமே
கண்ணுல் தெரியுதுபார் 22

எப்போதுமுப்பத்தாறு செப்பாமல் செப்பிவிட
முப்பாழும் பாழாகும்பார் கட்டித்தங்கமே
முப்பாழும் பாழாகும்பார் 23

அரும்பொருளான அழியாப்பொருளதனை
அறிவாலறிந் துன்னில்பார் கட்டித்தங்கமே
அறிவாலறிந் துன்னில்பார் 24

அட்டாங்கயோகநிஷ்டை கிட்டவே இஷ்டம்வைத்து
ஆதிநடுப்பொருள் பார் கட்டித்தங்கமே
ஆதிநடுப்பொருள் பார் 25

சொல்லரியமாயைதனை சொல்லாமல்சொல்லிவிட்டு
இல்லென்றதால் வெல்லப்பார் கட்டித்தங்கமே
இல்லென்றதால் வெல்லப்பார் 26

சட்டமுனிகளின் கட்டுரையின் படியே
வட்டமதி நிலைபார் கட்டித்தங்கமே
வட்டமதி நிலைபார் 27

புத்திக்குமெட்டாத மத்திபத்திபமதை
பொருந்தியுணர் நிலைபார் கட்டித்தங்கமே
பொருந்தியுணர் நிலைபார் 28

கோட்டைவாயுட்சென்று கொடிமரம் கைக்கொண்டு
பாட்டையுணர் பரிபார் கட்டித்தங்கமே
பாட்டையுணர் பரிபார் 29

போகமதைவிட்டு யோகமதைத் தொட்டு
பாகமாக்குன் னிலைபார் கட்டித்தங்கமே
பாகமாக்குன் னிலைபார் 30

பூற்றற்றுருத்தியிது காற்றையடைத்து வைத்து
பிரபஞ்ச மாளுதுபார் கட்டித்தங்கமே
பிரபஞ்ச மாளுதுபார் 31

பெண்ணாசையிற்சிக்கிக் கண்டங் கழிக்காமல்
விண்ணி லிணங்கியேபார் கட்டித்தங்கமே
விண்ணி லிணங்கியேபார் 32

ஞானகுருவடியாம் நந்தியிடஞ் சென்று
ஞானநிலை தேர்ந்துபார் கட்டித்தங்கமே
ஞானநிலை தேர்ந்துபார் 33

மண்ணாசைபெண்ணாசை பொன்னாசையை விட்டு
மனவாசியில் சொக்கிப்பார் கட்டித்தங்கமே
மனவாசியில் சொக்கிப்பார் 34

வலைவீசும்முலையாசை உலையிட்ட மெழுகாக்கி
கலைவாசி நிலைசொக்கிப்பார் கட்டித்தங்கமே
கலைவாசி நிலைசொக்கிப்பார் 35

வாலைப்பிராயம் வடிவான பெண்மாயை
மூலத்தில் சிக்காமல்பார் கட்டித்தங்கமே
மூலத்தில் சிக்காமல்பார் 36

தண்டாமரைக்கமலம் கண்டால் கனசூட்சம்
வண்டாட்ட மானதைப்பார் கட்டித்தங்கமே
வண்டாட்ட மானதைப்பார் 37

பட்டமதுகாற்றால் பறந்தாடும் சூட்சமதை
வட்டமதி தன்னில்பார் கட்டித்தங்கமே
வட்டமதி தன்னில்பார 38

ஆவென்றமுப்பொருள் அந்தரங்கம்பொதிந்த
ஐயின்கலிமா நிலைபார் கட்டித்தங்கமே
ஐயின்கலிமா நிலைபார் 39

அந்தக்கரணநிலை கண்டுகொண் டிருக்கவே
ஐமூன்று நாலதைப்பார் கட்டித்தங்கமே
ஐமூன்று நாலதைப்பார் 40

கலிமாவறுநாங்கைக் கருத்தோடுருவாக்கி
அலிமாமன் முன்சென்றுபார் கட்டித்தங்கமே
அலிமாமன் முன்சென்றுபார் 41

கருவதினுட்பொருளைக் கண்டே யறிந்திடவே
திருவானதை யுற்றுப்பார் கட்டித்தங்கமே
திருவானதை யுற்றுப்பார் 42

உருவிலுருவான உட்பொருள்த்திருவான
கருவின் கருவதைப்பார் கட்டித்தங்கமே
கருவின் கருவதைப்பார் 43

குருவடிமுன்சென்று குருநிலையைக் கண்டு
குன்னிலை தன்னிலைபார் கட்டித்தங்கமே
குன்னிலை தன்னிலைபார் 44

குருவைபுருவாக்கி குன்னிலை தெளிந்தபின்பு
திருவொளி தன்னிலைபார் கட்டித்தங்கமே
திருவொளி தன்னிலைபார் 45

காதிலுபதேசம் போதித்த சற்குருவை
சாதித்துன் தன்னிலேபார் கட்டித்தங்கமே
சாதித்துன் தன்னிலேபார் 46

தெரிசனையாய்க்குருவை தெங்காட்டிலே யறிந்து
பிரிசம்வைத் துன்னிலேபார் கட்டித்தங்கமே
பிரிசம்வைத் துன்னிலேபார் 47

முந்தவொளிவான முஸ்தபா தன் னொளிவை
வந்தவழி தனில்பார் கட்டித்தங்கமே
வந்தவழி தனில்பார் 48

அந்தவழிதன்னி லைந்துமொன்றாய்க் கண்டு
சிந்தை தெளிவதைப்பார் கட்டித்தங்கமே
சிந்தை தெளிவதைப்பார் 49

அந்தமுதலுமற்ற அற்புதமாம் பொருள்கண்டு
நந்திவடி வதைப்பார் கட்டித்தங்கமே
நந்திவடி வதைப்பார் 50

ஓர்மனமாய்நின்று ஓயாதிறைஞ்சுதற்கு
கூர்மை குருநிலைபார் கட்டித்தங்கமே
கூர்மை குருநிலைபார் 51

அப்படியேகண்டு அறிவாலறிந்த பின்பு
செப்பரும் பொருளதைப்பார் கட்டித்தங்கமே
செப்பரும் பொருளதைப்பார் 52

இவ்வான்பொருள்கண்டு இருதயமீதிலுண்டு
ஹூவென்றதின் நிலைபார் கட்டித்தங்கமே
ஹூவென்றதின் நிலைபார் 53

அவ்வல்நிலைகண்டு ஆகிர் நிலைசென்று
கவ்வைகளை நீக்கிப்பார் கட்டித்தங்கமே
கவ்வைகளை நீக்கிப்பார் 54

தம்மென்றதின்நிலை தாபரமான பொருள்
அம்மென்றும் ஹூம்மென்றும்பார் கட்டித்தங்கமே
அம்மென்றும் ஹூம்மென்றும்பார் 55

ஆதம்மொழிந்தபொருள் அல்ஹம்ந்து வானசுருள்
வேதம் நிறைந்ததுபார் கட்டித்தங்கமே
வேதம் நிறைந்ததுபார் 56

சொல்லிலடங்காத சோபன மானதுகேள்
நல்லநாலா றென்றுபார் கட்டித்தங்கமே
நல்லநாலா றென்றுபார் 57

நம்புமுபதேசம் நாலாறு என்றதனில்
தம்பப் பொருளதைப்பார் கட்டித்தங்கமே
தம்பப் பொருளதைப்பார் 58

தீனோர்தெளிந்தார் திருக்கலி மாவதனில்
வானோர் புகழ்ஹம்ந்துபார் கட்டித்தங்கமே
வானோர் புகழ்ஹம்ந்துபார் 59

வையகத்தில்அல்ஹம்ந்து ஸிற்றுஹூவென்றதுடன்
மையம் தெளிநிலைபார் கட்டித்தங்கமே
மையம் தெளிநிலைபார் 60

வள்ளலாமிப்பொருள் வரிசைக் கலிமாவில்
புள்ளித் தலமதைப்பார் கட்டித்தங்கமே
புள்ளித் தலமதைப்பார் 61

ஆதியில்அரூபாகி சோதியில் சொரூபான
நீதி நினைவதைப்பார் கட்டித்தங்கமே
நீதி நினைவதைப்பார் 62

நேசம்வைத்திப்பொருளை நெஞ்சிலமிந்தபின்பு
வீசும் நடுநிலைபார் கட்டித்தங்கமே
வீசும் நடுநிலைபார் 63

ஆறுபத்தாறுடனே நூறுளட் டானதனை
கூறிக் குருநிலைபார் கட்டித்தங்கமே
கூறிக் குருநிலைபார் 64

பத்தாறுடனுறை முத்தாகக்கண்டறிய
குத்தாம் விளக்கேற்றிப்பார் கட்டித்தங்கமே
குத்தாம் விளக்கேற்றிப்பார் 65

காரணமானபொருள் கருவா யிருந்தசுருள்
தாரணை தன்னிலைபார் கட்டித்தங்கமே
தாரணை தன்னிலைபார் 66

நற்பொருள்லாஅன இல்லாஹூவென்றதனில்
சொற்பொருள் ஹூவென்றுபார் கட்டித்தங்கமே
சொற்பொருள் ஹூவென்றுபார் 67

ஒப்புவமையில்லாத ஓர்பொருளைக்கண்டறிந்து
ஹூப்புவைத் துன்னிலைபார் கட்டித்தங்கமே
ஹூப்புவைத் துன்னிலைபார் 68

எப்போதும்தப்பாது றப்பைத் தெரிசித்து
செப்பாமலே செப்பிப்பார் கட்டித்தங்கமே
செப்பாமலே செப்பிப்பார் 69

அற்புதப்பொருளான ஆறுறு வென்றதுகேள்
கற்பங் கருநிலைபார் கட்டித்தங்கமே
கற்பங் கருநிலைபார் 70

மங்கையரின் ஆசைவிட்டுக் கங்குல் வெளிதிறந்து
திங்கள் சுடரொளிபார் கட்டித்தங்கமே
திங்கள் சுடரொளிபார் 71

வான்பொருளென்றதிருக் கோன்பொருளானதனை
தீன்பொரு ளானதில்பார் கட்டித்தங்கமே
தீன்பொரு ளானதில்பார் 72

ஆவென்றதின்பொருள் ஆலமமைந்த சுருள்
கோவாம் குருநிலைபார் கட்டித்தங்கமே
கோவாம் குருநிலைபார் 73

திருமணியானதுவே குருமணியானதுவாம்
உருமணி யோசையைக்கேள் கட்டித்தங்கமே
உருமணி யோசையைக்கேள் 74

முன்னர்குன்னென்றுரைத்த மாப்பொருளைக் கண்டறிந்து
தன்னையறிந் துன்னிலேபார் கட்டித்தங்கமே
தன்னையறிந் துன்னிலேபார் 75

கருணையுறும்பொருள் காபுநூறுன சுருள்
இருகண்ணிடை தனில்பார் கட்டித்தங்கமே
இருகண்ணிடை தனில்பார் 76

வெண்மைசெகப்புப்பச்சை வெண்சாரையின் சோதி
வண்மை யிதின்னிடைபார் கட்டித்தங்கமே
வண்மை யிதின்னிடைபார் 77

கிண்ணமதில்பச்சைபால் தண்டமுடிந்தவுடன்
பண்ணவன் முன்தரப்பார் கட்டித்தங்கமே
பண்ணவன் முன்தரப்பார் 78

முத்திவழிகண்டு முப்பொருள் உட்கொண்டு
புத்தி நிலைதனைப்பார் கட்டித்தங்கமே
புத்தி நிலைதனைப்பார் 79

பத்திரமதானதிரு பக்குவமதானவுரு
முத்திஞொளிவதைப்பார் கட்டித்தங்கமே
முச்திஞொளிவதைப்பார் 80

குத்துவிளக்கேற்றி குமரிவடிவைத் தோற்றி
முத்துப்பவளம் பச்சைப்பார் கட்டித்தங்கமே
முத்துப்பவளம் பச்சைபார் 81

ஆர்க்குந்தெரியாப் பொருளாதிநிறைந்த சுருள்
நேர்க்குச் சுழிமுனைபார் கட்டித்தங்கமே
நேர்க்குச் சுழிமுனைபார் 82

உங்களுயிர்நிலையை உற்று அறிந்துகொண்டு
திங்கள் முகம்மதொளிபார் கட்டித்தங்கமே
திங்கள் முகம்மதொளிபார் 83

அம்பரமானதிலே அஹ்மதொளிவைக்கண்டு
நம்பிகடம் புரிபார் கட்டித்தங்கமே
நம்பிகடம் புரிபார் 84

செய்யிதிற்றசூல்நபியைச் சிந்தைதனில் கண்டு
துய்ய மலரிதழ்பார் கட்டித்தங்கமே
துய்ய மலரிதழ்பார் 85

காட்டித்தருங்குரு வின்கழலிளைப் புகழ்ந்து
பூட்டியமு தூட்டப்பார் கட்டித்தங்கமே
பூட்டியமு தூட்டப்பார் 86

புள்ளிநிலைகண்டு புந்தியினுட்கொண்டு
பள்ளி வடிவதைப்பார் கட்டித்தங்கமே
பள்ளி வடிவதைப்பார் 87

அந்தரமீதில் அலிபு வடிந்தபின்னர்
சுந்தரலாம் சுழிமேல்பார் கட்டித்தங்கமே
சுந்தரலாம் சுழிமேல்பார் 88

சுழியிலொளித்திருந்த சூட்சப் பொருள்ஹேயை
வெளியாஞ் சுழிதனில்பார் கட்டித்தங்கமே
வெளியாஞ் சுழிதனில்பார் 89

வான்பொருளானசுழி மேன்பொரு ளானதனுல்
கோன்பொருளொன் றெண்ணிப்பார் கட்டித்தங்கமே
கோன்பொருளொன் றெண்ணிப்பார் 90

பிள்ளைகள்யாபேரும் தெள்ளத் தெளிந்துகொண்டு
வள்ள லுறும் பொருள்பார் கட்டித்தங்கமே
வள்ள லுறும் பொருள்பார் 91

சொல்லிலடங்காத சோபனமானபொருள்
வல்லப மானதுபார் கட்டித்தங்கமே
வல்லப மானதுபார் 92

வந்தவழிசென்று வரிசைப்பொருள் கண்டு
சொந்த நிலைதனைப்பார் கட்டித்தங்கமே
சொந்த நிலைதனைப்பார் 93

கோவென்றதைநாவால் கூற முடியாது
மாவாங்கனி ஹூவைப்பார் கட்டித்தங்கமே
மாவாங்கனி ஹூவைப்பார் 94

வல்லோனுரைத்தான்குல் ஹூவென்றவான்பொருளை
வில்லோடன்பைப் பூட்டிப்பார் கட்டித்தங்கமே
வில்லோடன்பைப் பூட்டிப்பார் 95

அந்திபகலற்ற தெரு வதனில் நடம்புரிந்து
ஆசையைப் பூசித்துப்பார் கட்டித்தங்கமே
ஆசையைப் பூசித்துப்பார் 96

சந்திப தங்கண்டு நானீயுமொன்றென்று
சந்தித் தெருவீதிபார் கட்டித்தங்கமே
சந்தித் தெருவீதிபார் 97

விந்தைப்பொருளிலங்கும் வீடதனிலுட் சென்று
சுந்தரமாம் பொருள்பார் கட்டித்தங்கமே
சுந்தரமாம் பொருள்பார் 98

இருளிலிருந்தபொருள் இல்லென்றமைந்தசுருள்
பெருகு மொலிதன்னில்பார் கட்டித்தங்கமே
பெருகு மொலிதன்னில்பார் 99

மூன்று மொன்றாநதுவே முச்சுடரானதுவாம்
சான்றோர் தரும்பொருள்பார் கட்டித்தங்கமே
சான்றோர் தரும்பொருள்பார் 100

மாண்டோரொலிமார்கள் மாப்பொருளை யுண்டோர்கள்
ஆண்டோ னருளதைப்பார் கட்டித்தங்கமே
ஆண்டோ னருளதைப்பார் 101

தினமேயுருவாக்கி மனமானதில்தாக்கி
வனமானதில் நோக்கிப்பார் கட்டித்தங்கமே
வனமானதில் நோக்கிப்பார் 102

சிந்தைதெளிந்துந்தன் சிற்பரத்தைக்கண்டு
ஐந்துமொன் றானதிற்பார் கட்டித்தங்கமே
ஐந்துமொன் றானதிற்பார் 103

ஆருமறியார்க ளம்பரத்தி னுட்சென்று
சேரும்ஜெப மூத்திற்பார் கட்டித்தங்கமே
சேரும்ஜெப மூத்திற்பார் 104

சொன்னால்தெரியாது சோபன மானபொருள்
என்னால் முடியாதுபார் கட்டித்தங்கமே
என்னால் முடியாதுபார் 105

மேவியதிப்பொருள் மேலவீதிச்சுருள்
ஹூவின் னிலைகண்டுபார் கட்டித்தங்கமே
ஹூவின் னிலைகண்டுபார் 106

காத்திமுல்லன்பியா காரண மானபொருள்
பூத்தபொரு ளதிர்பார் கட்டித்தங்கமே
பூத்தபொரு ளதிர்பார் 107

ஒன்பதுவாச லொருங்காயடைத்த பின்பு
தென்காட்டி லாடுதுபார் கட்டித்தங்கமே
தென்காட்டி லாடுதுபார் 108

தினமுந்திருவடி தீட்சையிலான பின்பு
கனமாங் கருவதைப்பார் கட்டித்தங்கமே
கனமாங் கருவதைப்பார் 109

பூரணமானபொருள் புந்திதன்னிற் கண்டு
தாரணி தன்னிலேபார் கட்டித் தங்கமே
தாரணி தன்னிலேபார் 110

ஆறுபத்தாறுடனே கூறிக்குருவருளை
நூறு முகம்மதைப்பார் கட்டித்தங்கமே
நூறு முகம்மதைப்பார் 111

கருணையுறும்பொருள் காபுநூனைசுருள்
பெருநய மானதுபார் கட்டித்தங்கமே
பெருநய மானதுபார 112

முந்தவொளிவான முஸ்தபா தன்னொளிவை
அந்திபகலிலும்பார் கட்டித்தங்கமே
அந்திபகலிலும்பார் 113

மந்திரப்பொருளதை மண்டபத்துட்கண்டு
நந்திவடி வதைப்பார் கட்டித்தங்கமே
நந்திவடி வதைப்பார் 114

கற்பந்தனையுண்டு கருவைநிதங் கண்டு
சிற்பர மானதைப்பார் கட்டித்தங்கமே
சிற்பர மானதைப்பார் 115

நற்றவமானகப்பல் நாலாறு மேலோடும்
உற்ற நிலைதனைப்பார் கட்டித்தங்கமே
உற்ற நிலைதனைப்பார் 116

மத்திபமானயிடம் மாப்பொருளைக் கண்டு
நித்யம் நினைவதைப்பார் கட்டித்தங்கமே
நித்யம் நினைவதைப்பார் 117

மங்கையராசைவிட்டு மாப்பொருளைத்தொட்டு
கங்குலொளிகண்டுபார் கட்டித்தங்கமே
கங்குலொளிகண்டுபார் 118

ஏங்கள்நபியிறசூல் தங்கள் திருவடியை
தங்கையுடனங்குபார் கட்டித்தங்கமே
சங்கையுடனங்குபார் 119

முத்தியுறும்பொருளை முண்டகத்துட்கண்டு
பத்திய தின்னிலைபார் கட்டித்தங்கமே
பத்திய தின்னிலைபார் 120

தோற்றும்பொருளைப்பார் தொண்ணூற்றாறின் சூட்சம்
மாற்றமில்லா மனம்பார் கட்டித்தங்கமே
மாற்றமில்லா மனம்பார் 121

வந்தவழியுற்று வல்லபமாய் நடந்து
நந்தி குருவடிபார் கட்டித்தங்கமே
நந்தி குருவடிபார் 122

இறையோனருளால் இதயம் தனில்கண்டு
நறைநபி தன்னொளிபார் கட்டித்தங்கமே
நறைநபி தன்னொளிபார் 123

பன்னிருகாலால் பறந்தோடு வாசிதன்னை
என்னேரமும் பூட்டிப்பார் கட்டித்தங்கமே
என்னேரமும் பூட்டிப்பார் 124

பூட்டும்பொருளீராறு காலில் நடுக்காலை
நாட்டிநடுப் பூட்டிப்பார் கட்டித்தங்கமே
நாட்டிநடுப் பூட்டிப்பார் 125

நடுவானஇருகாலைத் திடனாக வொருகாலாய்
உடுவான தின்னொளிபார் கட்டித்தங்கமே
உடுவான தின்னொளிபார் 126

நவ்வியநபியொளிவை நான்மூன்று மொன்றான
ஹூவ்வினிலைதனிற்பார் கட்டித்தங்கமே
ஹூவ்வினிலைதனிற்பார் 127

அவ்வலஹதானபொரு ளாகிறஹ் மதுவாய்
எவ்வகையும் மிதுபார் கட்டித்தங்கமே
எவ்வகையும் மிதுபார் 128

எவ்வகையும்மா யிலங்கும் பொருளான
ஹூவ்வென்ற தின்னிலைபார் கட்டித்தங்கமே
ஹூல்வென்ற தின்னிலைபார் 129

கலிமாநிலைகண்டு அலிமாமன் முன்சென்று
வலியோன் பொருள்நிலைபார் கட்டித்தங்கமே
வலியோன் பொருள்நிலைபார் 130

அப்புப்பிருதிவிதேய்வு வாய்வு ஆகாசம்
ஆன கருநிலைபார் கட்டித்தங்கமே
ஆன கருநிலைபார் 131

அன்பத்தொன்றான அனவென்ற மெய்ப்பொருளின்
அன்னிலை குன்னிலைபார் கட்டித்தங்கமே
அன்னிலை குன்னிலைபார் 132

லா அன இல்லாகூவில் லாலா வைஹூவென்று
லாகூ இல்லாகூவில்பார் கட்டித்தங்கமே
லாகூ இல்லாகூவில்பார் 133

எல்லாமல்லாகூவில் ஏகமாய்க்கண்டுகொண்டு
நல்லபொருளதைப்பார் கட்டித்தங்கமே
நல்லபொருளதைப்பார் 134

அல்லும்பகலா யனுஷ்டானம் செய்துந்தன்
அந்தக்கரண நிலைபார் கட்டித்தங்கமே
அந்தக்கரண நிலைபார் 135

அந்தக்கரண மதினிலையைக்கண்டு
அந்திபக லற்றிடம்பார் கட்டித்தங்கமே
அந்திபக லற்றிடம்பார் 136

இவ்விதமெல்லாம் இசைத்தபொருளது
ஹூவென்ற தின்னிலைபார் கட்டித்தங்கமே
ஹூவென்ற தின்னிலைபார் 137

ஹூவென்றதின்பொருளை குவலயமீதுரைக்க
எல்வாறு மேலாதுபார் கட்டித்தங்கமே
எவ்வாறு மேலாதுபார் 138

அவ்வல்ஆகிர்லாகிர் பாத்தின் ஒன்றானபொருள்
ஹூவென்றிறை சொல்லைப்பார் கட்டித்தங்கமே
ஹூவென்றிறை சொல்லைப்பார் 139

எல்லாமமைந்தபொருள் ஏகபரமான சுருள்
அல்பக லோயாமற்பார் கட்டித்தங்கமே
அல்பக லோயாமற்பார் 140

அல்லும்பகலோயாமல் அந்தநிலை கண்டு
ஆனந்த மானதைப்பார் கட்டித்தங்கமே
ஆனந்த மானதைப்பார் 141

நல்லாருரைத்தபொருள் நந்திவடிவானபொருள்
சொல்லால் மறைமுடிபார் கட்டித்தங்கமே
சொல்லால் மறைமுடிபார் 142

ஓயாமல் உந்தி நிலையில் தெளிந்துகொண்டு
காயாபுரிக்கோட்டைக்குள்பார் கட்டித்தங்கமே
காயாபுரிக்கோட்டைக்குள்பார் 143

காயாபுரிகோட்டைகண்டு காலிராறைக் கட்டிக்கொண்டு
பாயில்லாக் கப்பலேறிப்பார் கட்டித்தங்கமே
பாயில்லாக் கப்பலேறிப்பார் 144

பாவிசெய்குசுலைமான் பாயில்லாக் கப்பலேறி
பாடித் திரிவதைப்பார் கட்டித்தங்கமே
பாடித் திரிவதைப்பார் 145

தந்தைத்தாயென்ற ணுடற்பிறந்தோர் பிழையும்
தனியோன் பொறுப்பான்பாரு கட்டித்தங்கமே
தனியோன் பொறுப்பான்பாரு 146

எந்தன்கிளைகோத்திரத்தா ரெல்லா முஸ்லிம்களுக்கும்
ஏகன் பிழைபொறுப்பான் கட்டித்தங்கமே
ஏகன் பிழைபொறுப்பான் 147

கந்தமொருகாதவழி கமழ் மஹ்மூதொளிவை
கண்ணிலை மீதினிற்பார் கட்டித்தங்கமே
கண்ணிலை மீதினிற்பார் 148

சிந்ததனிற்கூர்ந்து சின்மயமா மெய்ப்பொருளை
சிந்தை நிலைதன்னிற்பார் கட்டித்தங்கமே
சிந்தை நிலைதன்னிற்பார் 149

மெய்யாகவிப்பொருளைமேன்மைபெறச்சொன்னதொகை
கைய்யூம் கண்க்கதில்பார் கட்டித்தங்கமே
கைய்யூம் கணக்கதில்பார் 150

துய்யோன்பொருளின் தொகைநூற்றன் பத்தாறின்
மெய்கண்டு சொன்னதுபார் கட்டித்தங்கமே
மெய்கண்டு சொன்னதுபார் 151

சொன்னவன்தெங்கோடை செய்குசுலையுமான்
என்று மிசைத்ததைபார் கட்டித்தங்கமே
என்று மிசைத்ததைபார் 152

எந்தன்பிழையை இறையோன் பொறுக்கவே
ஏகமாய்ச் சொன்னதுபார் கட்டித்தங்கமே
ஏகமாய்ச் சொன்னதுபார் 153

அல்பகலாய்ச் சொல்லிஇதை யன்பாய் முடித்தநான்
துல்ஹஜ்ஜி யொன்பதைப்பார் கட்டித்தங்கமே
துல்ஹஜ்ஜி யொன்பதைப்பார் 154

ஆண்டுஹிஜ்றத்து அல்புடன் முன்னூற்றிருபான்
ஆண்டொன்ப தானதில்பார் கட்டித்தங்கமே
ஆண்டொன்ப தானதில்பார் 155

எல்லாபிழையு மிறைபொறுப்பா னமீன்
நல்லசலவாத் தோதிப்பார் கட்டித்தங்கமே
நல்லசலவாத் தோதிப்பார். 156

மெய்ஞ்ஞானத் தங்கப்பாட்டு மாலை

முற்றிற்று.

முக்கிய விஞ்ஞாபகம்.

நண்பர்களே:—

இந்த ஷிபாமாலையும், இத்துடன் சேர்ந்த முனாஜாத்து பதிகங்களையும் யாதொரு மனக்கவலை யுடையவர்கள் வெள்ளி திங்கள் இரவுகளில் பக்தியாக மனஞாபகத்தோடிருந்து ஓதிவந்தால் அக்கவலைகளடியோடு தீர்ந்துவிடும். பெண்பிள்ளைகள் பிள்ளையுண்டான ஒன்பதாம் மாஸ்தையில் சிறப்பாய் விருந்தளித்து ஓதினால் வருத்த மின்றி பிள்ளைப்பிறக்கும் பலவியாதிகளுந் தீரும்படியுள்ள அற்புத அவிழ்தமாயிருக்கும். வழக்காளிகளோதினால் தமக்கனுகூலத்தைப் பெற்றுக்கொள்வார்கள். ஜூதுரி எனும் வைசூரி, றீஹூல் லஹ்மறெனும் பிளேக்குப்பேதி கால்ரு காச்சல் முதலாகிய பலவியாதியுடையவர்களுக்கருகே வைத்தோதி ஊதினாலும் படித்தாலும் சுலாஸ் பெறுவார்கள். சன்மப் பிணி, கரணப்பிணியுடையவர்களோதினாலும் அல்லது எந்த நோயாளிகளுக் கருகே வைத்தோதினாலும் ஆண்டவன் கிருபையால் அன்பியாக்கள் ஒளலியாக்கள் நாதாக்கள் முதியோர்கள் துஆபறக்கத்தால் சகல வியாதிகளுந் தீர்ந்து நற்சுகத்தை காண்பார்கள், இந்த பாடலிருக்குமிடத்தில் யாதொரு துன்பமு மணுகாது, ஒவ்வொரு நண்பர்கள் வீடுகளிலும் இருந்து வரவேண்டிய தவசியம்.

இங்ஙனம்,

மகுதூம் பாவாகாஸீம் தரகனா ரவர்கள் புதல்வர்

வா. மு. முஹம்மது யூசுபு லெப்பை.

பெருமாள் குளந்தெருவு, கோட்டாறு.

பிஸ்மில்லாகிற்றஹ்மானிற்றஹீம்.

ஷிபாமாலை.

வெண்பா.

அவ்வலஹு தானவனே யாண்டவனே நின்கிருபை
எவ்வாறு முள்ளபிணி யேகிடவே—இவ்வுலகி
லெப்போதுங் காத்தருள்வா ஏகபர மானவனே
தப்பாது எப்பிணி யுந்தீர் (1)

ஆதியே யுன்கிருபை யல்லுபக லாயிரங்கி
நீதியாய் கேட்குகுறே நீயருள்வாய்—மேதினியில்
வேதியர்க ளானஒலி மீதிரங்கி யுன்பாலில்
சோதியாய் கேள்க சுகம்தா. (2)

உலகில்வெளி யானபிணி யொன்றொன்றையும் படைத்தாய்
கலகமதி லாகாமர்க் காப்பாத்து—பெலமான
சுதுரிதா கூனுடனே சுகயீன மானவபா
கதுறத் தாகாமல் னீகார். (3)

இவ்வுலகில் னீபடைத்த எல்லாப் பிணியகலச்
செவ்வையுடனே னீதான் செய்திடுவாய்—கௌவயறக்
காப்பாத்து வாயிறையே காத்திமி றசூல் பொருட்டால்
ஆபத்தெல்லா மகலவே. (4)

எல்லாப் பிணிகளது மேகமாய் போகிவிட
னல்லானே யுன்னுதவி னுள்தோறும்—னயகனே
எல்லார்க்குஞ் செய்திடுவா யிறை மூஹ்யித்தீன் பொருட்டால்
அல்லாகூ யாஷாபினீ (5)

வேறு.

அவ்வலஹு தானவனே அரியபொருளே எங்கோனே
செவ்வையாக வெவ்வற்றும் சிறப்பாயமைத்து வளர்பவனே
எவ்வாறுன பலபிணியு மெங்கள்மீது அணுகாமல்
கூவ்வே யிறையே கார்த்தருள்வாய் கோன்யாஷாபி றஹ்மானே. (6)

வேறு.

எல்லாப் பிணிகளது மேகமாய் போகிவிட
னல்லார்கள் தன்பொருட்டால் நாயகனே னீக்கிடுவாய்
பொல்லாப் பிணிகளெல்லாம் போயொளியக் கிருபைசெய்வாய்
அல்லாவே ஆபத்தெல்லா மகற்றிவைப்பாய் றஹ்மானே. (7)

வாதபித்தமீறி வரும்னோய் சிலேர்பனத்தால்
தீதகற்றி னோயகற்றி தினம்னீ ஷிபாவருள்வாய்
எதுவிதத்தாலு மிடற்சுதுரி னீக்கிடுவாய்
ஆதியே தீதகற்று அற்றஹ்மான் றஹ்மானே. (8)

அந்திபகலாக உன்பா லாண்டவனே கெஞ்சுகுறேன்
வந்தமுசீ பத்துவெல்லாம் வளிவிலகச் செய்வாயே
புந்திமிகவே கலங்கி பூரணனே யுன்னிடத்தில்
சொந்தமாய்க் கேள்குகுறேன் சுகம்தா றஹ்மானே. (9)

பொல்லா சுதுரி தாகூன் போயொளியக் கிருபையருள்
எல்லா பிணிகளதும் யிடறுகளும் தீர்ந்திடவே
னல்லயி றசூல்பொருட்டால் நதிர்மூஹ்யித் தீன்பொருட்டால்
அல்லாவே பிணியகற்றி யாதரிப்பாய் றஹ்மானே. (10)

வையமதில் கீர்த்திபெற்ற வள்ளலஹ்ம துல்கபீறின்
மெய்யான காரணத்தால் மேதினியில் பிணிதீர்ப்பாய்
செய்யிதஹ்ம துல்கபீறின் சீர்பாதந் தலைக்கணிந்தேன்
அய்யமதை யகற்றிவைப்பா யாண்டவனே றஹ்மானே. (11)

சங்கையுள்ள நாயகராம் ஷாகுல் ஹமீதின் பொருட்டால்
எங்களி னிடர்தவிர்ப்பா யிறையே ஒலிமார் பொருட்டால்
திங்களொலி மார்பதத்தை தினந்தினமென் சிரமணிந்தேன்
அங்கமுள்ள பிணிகளெல்லா மகலச்செய்வாய் றஹ்மானே. (12)

குற்றமொன்று மணுகாமல் குறையாஞ் சுதுரிதாகூன்
யித்தலத்தி லுள்ளவபா இடர்தீர்த்துக் காத்தருள்வாய்
சுத்தமா எப்பொழுதும் சுகமா யிருக்கவருள்
அத்தனே அடிமையைக் காரசே றஹ்மானே. (13)

எல்லா ஒலிமாரை என்னுளத்திலே துதித்தேன்
பொல்லாசுதுரி தாகூன்போ யொளியக் கிருபை செய்வாய்
சொல்லி முடியாப் புகழுடைய தக்கலை கோட்டார்
அல்லா ஒலிமார் பொருட்டால் ஆபத்தைத்தீ ரஹ்மானே (14)

தெங்கோடை மாநகரில் செய்கு முஹ்யித்தீ னின்ற
பங்கமுள்ள செய்கு சுலைமான் பாமாலை எந்தருள்வாய்
சங்கையுள்ள னபிபொருட்டால் சாகிபொலி மார்பொருட்டால்
அங்கமுள்ள பிணிதீர் பாயரசே ரஹ்மானே. (15)

வேறு.

ஆதிறஹ்மானே யுன்கிறுபை யல்லுபகலுமே யிரக்குகுறேன்
நீதினபிமார்கள் தன்பொருட்டால் நித்தநித்தமுஞ் சுகமருள்வாய்
சோதியொலிமார்கள் தன்பொருட்டால் சுகமாயிருக்கவே கிருபைசெய்வாய்
வேதியோர்களின் தன்பொருட்டால் வினைகள் தனைனீக்கு யாஷாபினீ(16)

பொல்லாப் பிணியான சுதுரிதாகூன் போகவேனிதம் சுகமருள்வாய்
அல்லுபகலுமே வருத்தத்தினால் அதாபுபடு வதைனீக்கி வைப்பாய்
சொல்லி முடியாத சுகவீனத்தின் தொந்தரவான வருத்தங்களை
னல்லாகனீக்கி சுகமருள்வாய் ஞயனேறஹீம் யாஷாபினீ. (17)

துன்பவருத்தத்தா லுடல்முழுதும் துயரப்படுவதைப் பார்க்கிலையா
இன்பமாகவே இரங்கியருள் ஏழையாகிய பேர்கள்மீது [துவாய்
குன்மகுஷ்டனோய் சுதுரிதாகூன் குறையொன்றணுகாது காப்பாத்
னன்மையாகவே சுகமருள்வாய் ஞயனேறஹீம் யாஷாபினீ (18)

உதவி எங்கள்மேல் செய்தருள்வாய் உடலிலுள பலபிணிகடீர்பாய்
கதறுதல் பார்க்க முடியவில்லை கனியே றஹ்மானே பிணிதீர்த்
[தருள்
சிதறிப்போகவே சுதுரிதாகூன் சிணத்தில் கிருபைசெய் யாறஹீமே
அதருபோலவே ஆபத்தெல்லாம் அகண்டுபோகச்செய் யாஷாபினீ.

பல்விதமான சுதுரி முத்து பணிந்து உதிரவே கிருபையருள்
தலத்தில் சுதுரினோய் தாகூனுடன் தருணமிதில் வபாவது உம்தீர
பெலத்தனோயெல்லாந் தீர்ந்திடவே பேணிக்கிறுபைசெய்யாறஹீமே
உலரவேயிந்த ஜ..துரிமுத்தை உடனே தீர்த்தருள் யாஷாபினீ.(20)

பற்பலவித கட்டிகளால் படுந்துயரத்தை மாற்றி வைப்பாய்
சொர்பனேரமும் பிணியில்லாமல் சுகமாயிருக்கவே வருள்புரிவாய்
சிற்பரன்பொருள் தன்பொருட்டால் சினையாய்வரும் தும்பமாற்றி [வைப்பாய்
அற்பனேரமும் பிணியில்லாமல் அடிமைக்கருளுவா யாஷாபினி. (21)

முத்து வடிவுபோல் பவளம்போலு மூணகூடிய தாகூன் ஜுதுரிமுத் [தை
யத்தி யாலிலே யுதிர்ந்ததுபோ லடியோடே முத்து உதிரிதீர்ப்பாய்
சத்தியம் னபிபேரி லாணை சலவாத்தின் பொருட்டால் மாற்றுவாய்
பித்தனோய் பாண்டு சூடு சுரம் பிணிகள் மாற்றுவாயாஷாபினி. (22)

சங்கையுளயார்கள் மற்றுமுள்ள சார்ந்த அசுஹாபி மார்பொருட்டால்
பங்கமணுகாத சுகதாக்களின் பலனு முத்தகீங்கள் பொருட்டால்
எங்கள்மீதிலே ஓர்போதிலு மெதிர்கால மொருபிணிவராமல்
அங்கமுள பலபிணி மாற்றுவா யரசே றஹ்மானே யாஷாபினி. (23)

கொடிய பைசரசங் கூறுகளுங் கொடுமையாகிய சூனியமும்
மடிவான முகமாத்து வஞ்சம் மனுடர் கண்ணூறுனு வேறதும்
அடிக ணபிபாதம் பணிந்தோர்களின் அங்கமுளபிணி எல்லாமாற்று
நொடியில் பிணிமாற்றி யாண்டருள்வாய் ஞயனே றஹீம்யாஷாபினி. (24)

வந்தபிணி எல்லாம் வளிவிலக வள்ளல் னபியிறசூல் பொருட்டால்
எந்தவேளையு முன்னிடத்தி லிரங்கிக் கேள்க்குறேன் சுகமருள்வாய்
புந்திகலங்கியே பாடுகுறேன் பிணிகளறத் தீர்த்துக் காப்பாத்துவாய்
அந்தி பகலிலும் சுகமருள்வாய் அற்றஹ்மான் றஹீம் யாஷாபினி. (25)

கட்டினோய்களுங் கண்டமாலே கால்கை முடக்கமும் வீக்கமறக்
கெட்டியானனோய் பலதுந்தீரக் கிருபைசெய்தருள் யாஹபீலே
வட்டிவாங்குவோர் வயறுபோல வரும் வீக்கமதை மாற்றியரு
ளட்டியில்லாம லெப்பிணியு மகற்றி வைப்பாயே யாஷாபினி. (26)

வேறு.

ஈளையிளைப்பு யிருமல் விக்கலிடரும் பிணிகடீர்ந்திடவே
கோளை ஜன்னி பலநோயுங் கொளுவல் கொள்ளை தீர்ந்திடவே
வேளையிதுதா னுன்பாலில் வேன்றியிரந்தே னருள்புரிவாய்
ஞாளைஎன்று சொல்லாமல் னலமாயருள்வா யாண்டவனே. (27)

னிசமாயுன்பால் கேழ்க்குகுறே நீதியான மருந்திதென்று
பிஸ்மில்லாகிற் றஹ்மானி பிலமாம்னிற் றஹீமதனில்
இஸ்முல்லகுல மிதிலானவின்பமருந்தால் பிணிதீர்ப்பாய்
அஸ்மாபொருட் டாலாபத் தெலால் மகற்றிவைப்பா யாண்டவனே.

குறுவான்வேதப் பொருளாணை குறித்த தஉருத் ததினுணை
பெறுபேறிஞ்சில் தன்னுணை பெலமாகிய சபூறுணை
மறுக்கம் னீக்குஞ் சுஷ்பாணை மண்டில் பிணிகடீர் தருள்வாய்
தறுகலான பிணிதீர்ப்பாய் தனியே யிறையே யாண்டவனே. (29)

ஒலிமார் தங்களின் பொருட்டா லுறுநோய் பலதுந் தீர்த்திடுவாய்
எலிதேள் பாந்தள் பல்விசமு மெல்லா மிருகங்கள் விசமும்
புலிநோய் பேனோய் விசமும் பிணியுந்தீரக் கிருபை செய்வாய்
அலிமா துலரின் தன்பொருட்டா லாபத்தகற்று ஆண்டவனே. (30)

சொல்லி முடியாவி சச்செந்தை தொல்லுலகி னில்படைத்தாய்
குல்லும்படைத்து ஆள்பவனே குறையொன் றணுகா தருள்புரிவாய்
அல்லு பகலு முன்னிடத்தி லழுதுகெஞ்சி யிரக்குகுறேன்
பொல்லா விசமும் பிணிதீர்த்து பொருந்தியுதவு ஆண்டவனே. (31)

மெத்தநேர முன்னிடத்தில் மேனியுருகி யழுதிரந்தேன்
குத்தம்பொறுத்து ஆண்டருள்வாய் குறையாம் நோய்களறத்தீர்த்து
சுத்தமாக சுகமருள்வாய் சுதுரிதாகூன் வபாதீர்த்து
நித்தம் சுகமா யிருக்க வருள் நீதி றஹ்மானாண் டவனே. (32)

எழுவித மாயுள்ள முத்துவெல்லா முறையாய் தீர்ந்திடவே
ஆளுமிறையே யுன்பாலி லழுதுகெஞ்சி யிரக்குகுறேன்
வாழுந் துன்யா வானதிலே வரும்நோய் பலதுந் னீக்கிடுவாய்
நாளும் சுகமாயிருக்க வருள்னலந்தா றஹ்மானாண் டவனே. (33)

பவமே மிகுத்த பாவிகளின் பலனோய் துன்பந் தீர்த்திடுவாய்
செவிடுமை குருடுந் தீரத்தினமு மருள்செய் திவ்வியனே
அவமே மிகுந்த பாவிகளின் அதாபை னீக்கி யருள் புரிவாய்
சிவமேயுன் பாலிரக்குகுறேன் சுகந்தா றஹ்மானுண் டவனே. (34)

காச்சல் வருத்த மகலவருள் கநத்த னடுக்கந் தீரவருள்
பேச்சுக் குறைவு ஆகாமல் பேணி நிதமுங் காத்தருள்வாய்
ஆச்சியானை யாதரிப்பா யாபத்தெல்லாந் தீற்த்திடுவாய்
வாச்சியம் தீற்த்தருள் புரிவாய் அல்லான் றஹ்மானுண் டவனே. (35)

குன்ம குஷ்ட மணுகாது [illegible]றைநோயுடனே பலநோய்கள்
முன்னோர் பொருட்டால் தீர்த்திடுவாய் முறையாங் காச்சலற னீக்கி
இன்னேரம் நீயுதவிசெய்வா யிடரும் பிணிக டீர்ந்திடவே
சொன்ன சுதுரி பலநோய்கள் சுறுக்கில் சுகந்தா ஆண்டவனே. (36)

வேறு.

அல்லாவின் னுதவிகொண்டு மன்பியா பொருட்டினாலும்
நல்லொலி மார்கள் தங்கள் நாலுயார் மற்றுமுள்ள
எல்லவரசு ஹாபுல்பத் ரீங்களின் பொருட்டினாலும்
இல்லினில் பிணிகடீர்த்து இறையருள் செய்ஹபீலே. (37)

186112

வேறு.

தற்கலைப் பதியில்வாழுந் தாட்டிக ரானவள்ளல்
ஹக்கிட மிரந்துகேட்ட கருணையாம்பு கழ்ச்சியாணை
இக்கட்டு பலதுந்தீர்த்து இனியொரு போதுநோய்கள்
மக்களுக் கணுகாமற் கார் மன்னனே யாஹபீலே. (38)

காலத்தின் விதியால்வந்த கடும்பிணி யகலச்செய்வாய்
மேலவன றுஷி ஞாணமெய்யுள பிணிகடீர்ப்பாய்
தாலமீ தவுலியாக்கள் தங்களின் பொருட்டினாலே
சீலமா இருக்கச்செய்வாய் சிற்றுனீ யாஹபீலே. (39)

நஞ்சதின் விசத்தை மாற்றி நல்லருள் செய்வாயல்லா
கெஞ்சியே யுன்பால் கேள்க்குங் கிருபையா முனாஜாத்தாணை
பஞ்ச பாதகங்களான பலபிணி எல்லாந் தீர்ப்பாய்
அஞ்செழுத்தாணை நோய்க ளகற்றுவா யாஹபீலே. (40)

பஞ்சு வன்னியிலே பட்ட பாடுபோல் பிணிகளெல்லாம்
அஞ்சியே நடுங்கியோட ஆபத்து அனைத்துந் தீர்ப்பாய்
வஞ்சகமான நோய்கள் வந்தடராமல் காப்பாய்
அஞ்சேழுத்தல் ஹம்தாணை யாபத்தை தீர்ஹபீலே. (41)

பாசிப் பட்டணத்தில் வாளும் பாரமா மொலியுல் லாமேல்
ஆசை வைத்தவரு னுன்பா லநுதின மிரந்து கேள்க்கும்
ஓசையா முனுஜாத்தாணை யுடலுள்ள பிணிகடீர்ப்பாய்
காசநோய் பலதுந்தீர்த்து கார்த்தருள் யாஹுபீலே. (42)

கட்டியின் கஷ்டத்தாலே கரைந்துன்பா லிரந்துகேள்க்க
அட்டிஇல் லாமலிந்த வடுமைகள்க் கிரங்கி யாள்வாய்
கெட்டியா யுள்ளனேயைக் கிருபைசெய் தகற்றிவைப்பாய்
மட்டியென் றிகள்ந்திடாது மண்டுனில் கார்ஹபீலே. (43)

பலவிதமான நோயும் பயந்ததால் வந்தநோயும்
குலத்தினில் வந்தநோயுங் குவலய மிதில் நோய்தீர்ப்பாய்
தலயினில் நோவுதீர்த்துத் தடயிலா தாளுவாயே
பெலத்தநோய் பலதுந்தீர்த்து பேணியே கார்ஹபீலே. (44)

வயத்தினில் வலியுந்தீர்த்து வாய்வினின் வருத்தந்தீர்த்து
பயத்தினல் வந்த பைசாசங்க ளிந்துயரந்தீர்த்து
நயனத்தின் நோவுதீர்த்து நல்லருள் செய்வாயல்லா
சயத்தினல் வந்தநோயுஞ் சல்தியில் தீர்ஹபீலே. (45)

இம்மையி லுள்ள நோய்க ளிடறனத மாற்றி யாள்வாய்
அம்மையின் வருத்தந்தீர்த்து ஆபத்தை யகற்றி யாள்வாய்
கம்மலின் வருத்தந்தீர்த்து காத்தருள் செய்வா யல்லா
செம்மலே சிரங்குவங்கு சொறியதைத் தீர்ஹபீலே. (46)

கூறியநோய்க ளெல்லாங் குவலயந் தனிலே தீர்த்து
சீறுதலான நோய்கள் சினப்புகளதுவுந் தீர்ப்பாய்
மீறுதலான நோயும் மிகுதமே வரும்நோய் தீர்ப்பாய்
ஊறுதலான நோய்க ளுடனுடன் தீர்ஹபீலே. (47)

கோடைமா நகரில்வாழுங் கோனரசான எங்கள்
மேன்மையி லானபூவா காஸீமென் ஒலியுல்லாமேல்
நாடியபோது எல்லா நஞ்சுள்ள பிணிகடீர்ப்பாய்
பாடிய முஞ்ஜாதோ தப் பல னருள்யா ஹபீலே. (48)

சீருள்ள கோடையூரில் திருபகுதா தால்வந்தோர்
பேரபூ பக்கர் மஸ்த்தான் பேரினி லாணையாகத்
தாரினிலுள்ள நோய்கள் தரித்திடா தோடிப்போகக்
காருனி குருவினுணை கலக்கங்கள் தீர்ஹபீலே. (49)

மன்னராய் வந்தபகீறு மன்னுனென் சாகிபானோர்
சன்னிதா னத்தில்வந்து சலித்தளு திரந்துகேட்டேன்
இன்னமோர் போதுந் துன்ப மிடறுகள் வராமல் காரு
முன்னவா முஸீபத்தெல்லாம் முடுகிடா தருள்ஹபீலே. (50)

வையமே புகளுமொட்ட மன்னுவென் செய்கினுணை
பொய்யுலகுள்ள எல்லாப்பிணிகளு மகன்றுஓட
செய்யிது முஹியித்தீன்மேல் செய்திட்டேன் சத்தியம்பாரு
துய்யனே கபூல்செய்தாண்டு துணையருள் செய்ஹபீலே. (51)

அஞ்ஞான இருளைநீக்கு மன்புள்ள ஞானிவள்ளல்
மெய்ஞ்ஞான மானபாடல் மீதிலே ஆணையாக
அஞ்ஞானம் போலேயுள்ள ஆபத்து அகன்றுபோக
மெய்ஞ்ஞானப் பொருளைத்தந்து மேலவாகார் ஹபீலே. (52)

மேன்மையாய் வந்த செய்கு பகாவுத்தீ னொலியுல்லாமேல்
சாந்தியாய்க் கேழ்க்க எல்லாச் சஞ்சலபிணியுந் தீர்ப்பாய்
தானவன் விதியால்வந்த தாரணி நோய்களெல்லாங்
கோனவ னறவேதீர்த்துக் காத்தருள் யாஹபீலே. (53)

கோடைமா நகரில்வாளுங் கோதிலா ஒலிமார் தன்னை
நாடியே ஷிபாவின்மாலை நாயனினிடத்தில் கேட்டேன்
தேடிய பேர்கட்க்கெல்லாந் தேவனின் கார்மானந்தான்
பாடியபோது எல்லா பலாய்களை தீர்ஹபீலே. (54)

தென்னகர் கோடைஷெய்கு ஸலையுமா னிரந்து நித்தியம்
முன்னவ னிடத்தில் கேட்டேன் முஜீபெனும் பேரிலாணை
சொன்னனன் ஆணையாகச் சுகமருள் செய்வாயல்லா
இன்னமோர் பிணிவராமல் இடறுகள் தீர்ஹபீலே. (55)

காகிறூர் பதியில்வாழுங் காமிலாகிய கோன்வள்ளல்
சாகிபு ஒலிமார் முன்னும் சதகதுல்லா முன்னின்று
பாகமாய் கேள்க்க நித்தியம் பலாஎல்லா மகலச்செய்வாய்
வேகமாம் பிணிகடீர விரைவுடஞ் செய்ஹபீலே. (56)

மற்றுள்ள ஒலிமார் பேரில் மநத்துணி உடனே கேட்டேன்
சற்றுமே பிணிவராமல் சஞ்சல மகற்றி யாள்வாய்
குற்றமோர் போதும்வந்து குடிகொள்ளா தாளுவாயே.
பற்றினர் நோயுந் தீர்த்து பலனருள் செய்ஹபீலே. (57)

பலவிதமான நோய்கள் பாய்ந்திடா திரங்கி யாள்வாய்
சலநிதி போலதுன்பம் ஜல்தியில் நீக்கி யாள்வாய்
குலத்தினில் துன்பம் வந்து குடிகொள்ளா திரங்கியாள்வாய்
கலக்கங்கள் வந்திடாது காத்தருள் யாஹபீலே. (58)

மெத்தவே நொந்து உன்பால் மெழுகுபோ லுருகினுங்கள்
குத்தங்கள் பொறுக்கவேண்டி குறிப்புட னழுதுகேள்க்க
பெத்தபிள்ளையை தாய்தந்தை பேணியே காற்கும்போல
நித்தமுங் கார்த்து ஆள்வாய் நீதியே யாஹபீலே. (59)

எத்தனை நோய்களென்று எண்ணியே சொல்லுவேன்நான்
குத்தங்க ளெல்லாந் தீர்த்துக் குன்னிலை தந்து ஆள்வாய்
நித்தமும் வினைஇல்லாமல் நெடியவா கார்த்து ஆள்வாய்
கத்தனே நிதமுமாண்டு காத்தருள் யாஹபீலே. (60)

ஆண்டவனிடத்தில் கெஞ்சியழுது நானிரந்து கேட்டேன்
ஏன்ற மட்டிலுமே எண்ணி இறையவ னிடத்தில் கேட்டேன்
ஊன்றியே ஷிபாவின் மாலையுட யவனிடங் கையேந்தி
ஆண்டனாயகரே கேட்டு அருளுறு முஹ்றபித்தினே. (61)

ஆவலா யுங்கள்பாலி லழுதுஞா னிரந்து கேள்க்குங்
காவலா மொலிமார் பாதங் கருதியே யிறைபால் கேட்டேன்
தாவிய வியாதி எல்லாந் தாரணி தனிலே தீரக்
கோவிட மிரந்து கேட்பிர் கோஜா யா முஹ்யித்தீனே. (62)

ஈனமாய் வந்த நோய்க ளிடறது தீர்த்து ஆள்வீர்
தீநதின் பிணியை னீக்கித் திருப்பெயர் நாமம் பெற்றீர்
மானுக்குப் பிணையாய்னின்ற மஹ்மூது நபியின்பேரா
கோனிட மிரந்து கேள்ப்பீர் கௌதுயா முஹ்யித்தீனே. (63)

உலகினில் தாங்கள் செய்த உண்மையாங் காரணங்கள்
பலபெய ரெடுத்துச் சொன்னர் பாவிஞான் சிறுது சொன்னேன்
கலகமென் மீதுருது காத்தருள் செய்யுங் கோவே
தலத்தினில் பிணிதீர்த் தாள்வீர் ஷெய்குயா முஹ்யித் தீனே. (64)

காலத்தின் விதியால் வந்த கடும்பிணி ஜ துரி தாகூன்
கோலத்தை மாற்றிவைத்து கொடும்பிணி யானபேதி
மேலினில் வந்திடாமல் மேலவ னிடக்தில் கேட்பிர்
தாலத்தில் பிணிதீர்த்தாளுஞ் செய்யிது முஹ்யித்தீனே. (65)

அடிமைகள் மீதோர் போதும் ஆபத்து வந்திடாது
கொடிய பைசாசின் கூறுங் கொடுமையாம் பலனோய்தீர
மடிமிசை வந்து கேட்டேன் மன்றினில் துயர்தீர்த் தாள்வீர்
தடியினில் சுகத்தைத் தாருந் தஸ்தகீர் முஹ்யித்தீனே. (66)

நல்லொலி மார்கள்பே ரைனுடியே புகழ்ந்து கேட்டேன்
பல்லவர்பத் ரீங்கள்தன் பறக்கத்தா மிஸ்மிஞணை
பொல்லாத நோய்கடீரப் புகழ்ச்சியா இரந்து கேள்ப்பீர்
சொல்லிதை ஏந்து ஆளுஞ் சுல்தான் யாமுஹ்யித்தீனே. (67)

இறையவ னிடத்தில் தாங்களிரு கைய்யை ஏந்திக் கேள்ப்பீர்
தறையினி லுள்ளதுன்பந் தரித்திடா தோடிப் போகக்
குறையுள்ள நோயுந் தீர்த்துக் குவலயந் தனிலே கார்த்து
சிறைஇதை னீக்கிக்கோரும் சிற்றுயா முஹ்யித்தீனே. (68)

தங்க ளின்புகளைப் பாடத் தரணியில் வல்லா ருண்டோ
எங்களுக் கிடறில்லாமல் இறையவனிடங் கையேந்தி
மங்கள முடனே கேட்டு மகிமையா இருக்கச் செய்வீர்
சங்கை யுள்ளவரே ஜெய்லானி செய்யிது முஹியித்தீனே (69)

மன்னவனிடங் கையேந்தி மண்டினில் துயர்கள் தீரச்
சொன்னனன் ஷிபாவின்மாலே தென்னகர் கோட்டா றுள்ளோன்
சின்னவன் பேருஷெய்கு ஸுலேயுமான் காதிறென்போன்
சந்நிதித் தொண்டன் காருஞ் செய்யிது முஹியித்தீனே. (70)

ஷிபா மாலே முற்றிற்று.

பேறு முனாஜாத்து.

பெண்கள் கெர்ப்பமாய் ஒன்பது மாஸ்தையில் பெண்டுகளுக்கு விருந்தளித்து நாச்சிமார்கள் பேரில் ப'த்திஹா ஓதும்போது இந்த முனாஜாத்தையுங்கூட ஓதவும், வருத்தமின்றி பிள்ளைப் பிறக்கும்.

மவுலாய - ராகம்.

ஆண்டவனே யுன்னிடத்தி லாதரவாய் கேழ்க்குகிறேன்
பூண்டிருந்த பூவையர்கள் பிள்ளை லெகுவாய்ப் பிறக்க
ஊண்டிய னுகத்தினிலே யுள்ளமதி லென்னுளுந்
தோண்டிய பொருளானே துணையருள்வா யாண்டவனே. (1)

சங்கையிற சூல்னபிமேல் சத்தியஞ் செய்தே கேட்டேன்
திங்களொளிவான் அபூ பக்கர் உமறுது மானலி
பொங்கமுள்ள அசுஹாபுல் பத்ரீங்கள் தன்பொருட்டால்
மங்கையர்கள் மகிழ்ந்துபெற மண்டிலரு ளாண்டவனே. (2)

மன்னவனே யுன்னிடத்தில் மகிழ்ந்து து ஆவிரந்தேன்
இன்னமுள்ள நபிமார்க ளெல்லார் பறக்கத்தினுல்
முன்னோ ரொலி மார் பொருட்டால் மங்கையரின் கெர்ப்பமதைச்
சொன்ன உடன் வெளியாக்கிச் சோடமரு ளாண்டவனே. (3)

சுத்தமுள்ள நபிமார்கள் சுந்தர னம் பிராட்டிகளின்
வெற்றிதற ஜாத்ததனால் வேண்டியுன்பால் கேட்குகிறேன்
குற்றமொன்று மணுகாமல் குவலயத்திற் பிள்ளைபெற
நித்தனே நீயருள்வாய் நீதியுள்ள ஆண்டவனே. (4)

சித்தின்னி ஸாக்கள் பொருட்டால் சிந்தை கலங்கா தருள்வாய்
உத்தரவு தந்து தையலுடன் பிள்ளை பெற்றிடவே
குத்த மணுகாமல் கெற்பங் குணமா யிழகிப்பெறச்
சித்தம்வைத் தருள்புரிவாய் தேவேஎன் னாண்டவனே. (5)

உலகிலுள்ள யாவருக்கு முண்மை மாதா ஹவ்வா
சலசபாதம் பணிந்து தன்னவனிடங் கேட்டேன்
கலக்கமொண்டு மில்லாமற் கெர்ப்பம் வெளியாய் பிறக்கத்
தலத்தினி லுதவியருள் தனியவனே யாண்டவனே. (6)

நீதமுள்ள ஆண்டவனே நீ கிருபை செய்திடுவாய்
மாதருலகில் வாழ்ந்து மகிமையுறப் பிள்ளைப்பெத்து
ஆதமுட மக்களெல்லா மன்பாய் பலுகி வாழ்க
வேதமொரு நாங்காணை வெற்றியரு ளாண்டவனே. (7)

சங்கையுள்ள பாத்திமாதான் சந்தோஷமுடன் மகிழ
மங்கையர்கள் கூடிதுஆ மகிழ்வாகக் கேட்டனரே
பொங்கமாய் விருந்தளித்து புகழாகக் கேள்க்குகிறோம்
மங்கை வருத்தந் தீர்த்து மகவரச்செய் யாண்டவனே. (8)

முன்குறித்த தாய்மார்கள் முதியோர் பொருட்டதினால்
சொன்னதுஆ வேந்தருள்வாய் சுகமாய்க் குழவிவர
இன்னேர முதவிசெய்வா எங்கணபி மார்மனைவி
தன்மனையில் வந்தருள தயவருள்வா யாண்டவனே. (9)

வையமதி லென்னாளும் வாழ்ந்திருக்கக் கிருபையருள்
தையலர்கள் குழந்தைபெற தனியவனே யருள் புரிவாய்
துய்யநபி மார்கள் பெண்டீர் துணையாய்வந் திம்மனையில்
கைஏந்தி கேட்கவருட்க் கண்ணே யென்னாண்டவனே. (10)

மங்களமாய்ப் பிள்ளைப்பெற்று மண்டிநிலே வாழ்ந்திருக்க
சங்கையுடன் கேட்டதுஆ ஜல்தியில் கபூல் செய்தருள்
தெங்கோடை யெனும்பதியில் ஷெய்கு ஸாலிமா னிசைத்தான்
பொங்கமா எந்நிதம் பொருள்தா வென்றுண்டவனே. (11)

பேறு முனாஜாத்து முற்றிற்று.

கோட்டாறு.

வேம்படிப் பள்ளி திருக்காரண

பாப்பதிகம்.

வெண்பா.

ஆண்டவா ஒலிமார்பாத மன்புடஞ் சிரமணிந்தேன்
நீண்டபொருளை நினைவின் னேர்நிறுத்தி—ஏண்டமட்டும்
பூண்டபொருள் புந்திநிலை பூரணத்தை மத்தியிலே
ஆண்டருளுவா இறையே காப்பு.

வேறு சந்தம்.

லாஇலாக இல்லல்லாகு லாஇலாக இல்லல்லா
லாஇலாக இல்லல்லாகு முஹம்மதுற்ற சூலுல்லா.

ஆதிதூதரான நபிஅண்ணலி றசூலுல்லா
நீதியாகக் கோடைமா னகரில் வந்து காரணம்
மேதினியோர் காணவே மிகுதியாகச் செய்ததி
லோதினுன் புகள்வதற்கு ஒருபொருள் நீகாப்பதே. (லாயிலாக)

திக்கெல்லாம் புகள்சிறக்குந் திவ்ய கோடைமானகர்
தெற்கு மேற்குத் திசையிலே தினமிகுதி காரணம்
சக்தில்லாது நடத்துகின்ற சாகிபொலி மார்பதம்
ஒக்கவே என்னுள்ளமீது உகந்துவைத்து புகள்கிறேன். (லாயி)

மக்கம் துதித்த எங்கள் மன்னரி றசூலுல்லா
ஹக்கு கந்தபோது மிகுருஜூ சென்ற காரணம்
ஒக்கயும் ஆலிப்புலவ ருகந்து அதைப்பாடியே
சக்கில்லிர்மல் கோடை நகரில் சார்ந்து அரங்கேற்றினர். (லாஇ)

ஆலிப்புலவா தமக்கு அஹ்மதுற்ற சூலுல்லா
நூலினைப் படித்துக்கேட்டு நூற்றுளி பரிவட்டம்
சால்கொடுத் தணைத்தனர்கள் ஷாபிகு றசூலுல்லா
மாலதில் பிடித்த வேம்பு மண்டினிலே கற்பகம். (லாஇ)

அன்றுமுத லின்றுவரை என்றென்றுமே காரணம்
மண்டிலுள்ளோர் கூடுவது மா புதுமையாகுமே
நின்றமர மீதிலே நிறைபிறைய தன்னிலே
கண்டுளங் களிக்கவே கனதளர் தழைக்குதே (லாஇ)

கூடுவர்கள் கோடிபேர் குறைவுதீர நாடியே
பாடுவர்கள் கோடிபேர் பலன்மிகுதி பெருகவே
தேடுவர்கள் கோடிபேர் தெளிவாய் துயர்தீரவே
நாடுவர்கள் கோடிகோடி நலம்பெறுவ துண்மையே. (லாஇ)

சங்கையுள்ள சாகிபொலி மார்களின் சன்னதி
எங்குமே புகள்மிகுத்த ஏந்தல் பாவாகாஸீமின்
செங்கமலப் பாதமாட்டில் சேர்ந்தனர்கள் மூவ்வர்பேர்
தங்கமேருவாம் பகீறுமன்னன் முஹம்மது சாகிபே. (லாஇ)

அட்டதிசை கீர்த்திவாய்ந்த அண்ணலான எங்குரு
ஒட்டமன்னன் ஷெய்குவெண் டுலகமீதில் பேருறுஞ்
சட்டமான காரணங்கள் காட்டுங்குரு நாதராந்
திட்டமே விளக்குஞ் ஷெய்கு பஹாவுத்தீ னொலியுல்லா. (லாஇ)

காரணமுடைய ஒலிமார் பதம்பணிந்து ஞான்
தாரணியிலேபதிகந் தந்துள மகிழ்ந்தபின்
சீரணிபெற முன்வந்தேன் தேசமீது பாவிஞான்
ஆரணப்பொருளருளும் ஒளலியாக்க ளண்ணலே. (லாஇ)

தென்னகரிலுள்ள பைதல்ஷெய் கெனுஞ் சுலையுமான்
மன்னவ னருளையுண்ட மந்திரகுரு சீடராஞ்
சொன்ன சொல்லை யாவருஞ் சுகமுறப் படிக்கவே
முன்னவா அருள்சொரிந்து முற்றியருள் வாழியே. (லாஇ)

முற்றிற்று.

பாவாகாஸீ மொலியுல்லாப் பதிகம்.

லாஇலாக இல்லல்லாகு லாஇலாக இல்லல்லா
லாஇலாக இல்லல்லாகு முஹம்மதுற்றசூலுல்லா.

ஆதியிறசூல் நபிதன் அளகுமிகு ருஜஜதை
வேதியர்களா லிப்புலவர் வேதநாத னருளினல்
நீதியாகப் பாடியே நிலத்தில் கோடை மானகர்
சாதிமா னடங்குந்தல மீதிலரங் கேற்றினர். (லாஇ)

காரண முடைய வேம்பு காணுகின்ற பள்ளியில்
ஆரண முறையுடைய அண்ணலான யெங்குரு
தாரணியி லுறைந்த நாதர் தாலமீது காரணம்
பூரணமாய் நடத்துஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா (லாஇ)

ஆறுணலே ஓர்நிலேயி லருளுமென்ற ணணலே
பேறுபெற் றிருக்கவே பெலத்தமெய்ப் பொருளருள்
நூறுமாறு மன்பதான நுண்மதிப் பொருளருள்
ஆறுரண்டை யருளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா. (லாஇ)

அஞ்செளுத்து அல்ஹம் ததை யாறு நாலாயருளுவீர்
பிஞ்செளுத்து இன்னதெண்டு பீர்நிலேயி லருளுவீர்
தஞ்சமான தஞ்செளுத்துந் தைய்யிபுக்கலி மாவாய்
துஞ்சமுன்னே யருளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா.

நன்பிவந்த பேர்களுக்கு நல்லருளே செய்குவீர்
அன்பத் தொன்றதான பொருளே ஐனிடையி லருளுவீர்
குன்பொருளே இன்னதென்று கூவ்விலருள் செய்குவீர்.
முன்பொருளே யருளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா. (லாஇ)

வந்தவழி இன்னதெண்டு வாறருளி யாளுவீர்
கந்தங் காதம் வீசும் நபிகாத்திமி றசூல்லொளி
சிந்தைமீது கண்டிருக்க சிற்றருள் புரிகுவீர்
உந்தினிலே யருளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா (லாஇ)

இல்லெனும் நிலையொன்றென்று இருதயத்தி லருளுவீர்
நல்ல லாபமே பெருக நாட்ட மருள் செய்குவீர்
அல்லி ராப்பகலு மற்ற அறையை யெனக்கருளுவீர்
சொல்லிடாத சூட்சமருளும் பாவாகாஸீ மொலியுல்லா. (லாஇ)

கோடிபேர்க ளும்மிடத்தில் கோனெனப் பணிந்திட
நாடிவந்த நாட்டம்போல நல்லருள் புரிகுவீர்
பாடினோர் பலன்பெருகப் பாக்கியமே செய்குவீர்
தேடிவந்தோர்க் கருளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா.

எந்தவேளை தன்னிலு மிரங்கியாளு மண்ணலே
சொந்தமான சீடனென்று தொல்லுலகி லாளுவீர்
அந்திபகலாக என்னை யன்புவைத்து ஆளுவீர்
தந்திரமாயாளுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா. (லாஇ)

என்னுடன் பிறந்தோர் தந்தை தாயுடந்தில் மீதையும்
இன்னம் பெண்டு பிள்ளையும் இனத்தோர் சனத்தோரையும்
மன்னவ னிடமிரந்து மண்டினிலே காருமே
சொன்ன சொல்லை யேருஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா (லா)

ஹக்கனருள் பெற்ற ஒலி மார்கள் பாதம் பணிந்தவன்
தெக்குநகர் கோட்டை செய்து சுலையுமா னிசைத்தனன்
சக்கறவே வந்தருளுஞ் சாகிபென்ற னண்ணலே
மக்களுக்குதவுஞ் செய்யிது பாவாகாஸீ மொலியுல்லா. (லாஇ)

முற்றிற்று.

பகீறுமன்னுன் முஹம்மதொலிப்பதிகம்.

தோங்கல்.

ஆலமீதினில் புகழ் மிகுத்த அரசே எங்குரு வள்ளலேஙீர்
தாலமீதினில் தவம்புரிந்து தாபரக்குருவாய் வந்தோரே
காலகாலமுங் கலிமாப்பொருள்கண்டு இருக்கவே வருள்புரிவீர்
மாலுகம் ஒளுங்கருளும் பகீறுமன்னுன் முஹம்மது ஒலியுல்லாவே.

காரணமிகக் காட்டும்பிரே கருணை புரிந்தெனை யாளுவீரே
தாரணிதனில் தயைப்புரிந்து தநதாயருளுவீ ரெங்குருவே
பூரணநிலைபுந்தி தனில்புகளா யருளியே எனையாளுவீர்
ஆரணனிலையருளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே. (2)

தாய்போ லிரங்கியே அருள்புரிவீர் தாபரக்குரு வானவரே
சேயில்லாத பேருங்கள் முன்னில் சேர்ந்து வந்திட வருள்புரிவீர்
பாயில்லாக் கப்பல்மீதிலேறி பக்குவக் கரைசேர வருள்
மாயமறத் தீர்த்து காரும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே

மெத்த நொந்த பேருங்கள் முன்னில் மேலாம் பரமாகக் கூடிக்கூடி
குத்தம் பொறுத்தாள வேணுமென்று குருவே யுங்கள் பாலிரந்து [கேள்க்க
நித்த மருள்புரிந் தாளுமையா நினைவை கபூலாக்கித் தாருமையா
பெத்த பிள்ளைபோலாளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே

தங்கள்பேரிலே கந்தூரியைத் தனதாய நடத்துற காலையிலே
பங்கப்படறடி எதிரியாக பாவிகள்வந்து இடற்கூறவே
அங்கமீதிலே வடுஉண்டாகி அலங்கோலப்படச் செய்தவரே
சங்கை யாகவே யாளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே.

வள்ளலி றசூல்தான் வரிசையுடன் வரும்போ தெதிர்செண்டு கண் [டவரே
தெள்ளு மணியேநீர் மக்கமேகி தினமைந் தொழுகைத்தையுந் தொழு [தவரே
உள்ள துயரெல்லா மாற்றிவைத்து உடனே பூட்டது துறக்கச்செ [ய்வீர்
தள்ளைபோ லெனைப்பாரும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே

எங்கும் புகளுங்கள் காரணத்தை யார்வல்லாரதை எடுத்துரைக்க
தங்கள்சந்நிதி முன்னில்நிதம் சலித்தபேர்களுங் கூடிவர
அங்கமுள்ள நோயெல்லாந்தீர அல்லாஇடத்திலேது ஆவிரப்பீர்
மங்களசுக மருளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே. (7)

கலகமில்லாமற் காப்பாற்றியே கந்தூரி தன்னைச் சிறப்பாக்குவீர்
நலமான நாட்டம் நிறைவேறவே நாயனிட மிரந்தருள் புரிவீர்
பலநாளும் மிகப்புதுமை காட்டி பாவிகளை ரெட்சித் தாளுவீரே
மலடு மாற்றியே யருளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லாவே.

நாட்டிற் சிறந்த ஊர்கோடை நகர்நல்ல நாயகமானவரே
எட்டி லெழுதவே காரணங்க ளெல்லாங் கூறவும் வல்லாருண்டோ
ஓட்டிமனச் சலிப்பெல்லாந் தீர்த்து உடையவனிடந் துஆவிரப்பீர்
மூட்டியமிர்தப் பாலருளும் பகீறுமன்னன் முஹம்மது ஒலியுல்லா [வே

தென்னகர் கோடைமிகச் சிறியோன் ஷெய்கு ஸாலேயுமா னனபாவி
மன்னநருளினுல் கவியுரைத்தேன் மாப்பொருளதை யறியவேண்டி
சொன்ன சொல்லேந்து வருள்புரிவீர் தொண்டனனவ னிரக்குகிறே
மன்னவனிடங்கேளும் பகீறுமன்னன் முஹம்மதுஒலியுல்லாவே. [ன்

முற்றிற்று.

ஒட்ட மன்னன் ஷெய்கொலிப் பதிகம்.

குறள் வெண்பா.

அட்டதிசையும் புகளுமண்ணலே எங்குருவே
ஒட்டமன்னன் ஷெய்கொலி.

எழுசீர் விருத்தம்.

ஆடியுள் முகம்போ லகத்தினுள் தோற்றும்
அற்புத நிலையதை யருளுந்
தேடியே யுன்பால் தினம் நிதம் வந்தேன்
தேட்டம்போல் திருப்பொருள் தாரும்
நாடியே இருக்க நடுநிலைப் பொருளை
நாலாறின் நிலைஎன வருளும்
ஓடிமுன் வந்தே ஹெருபொருள் தாரும்
ஒட்டமன்னன் ஷெய்குஒலியே. (1)

கோடைமாநகரில் குருவென உதித்த
கோனரசான வெங்குருவே
மேடையாம் பதியில் மேலவர் புகள
மேன்மையா யுதித்த மேலவரே
சாடையாய் கேள்க்க சரனிலையருளுநன்
சாகிபே வள்ளலே மேரே
ஆடையைத் தோவான் புளுக்கு மாப்போல
அளுக்க கற்றும் மன்ன ஹெலியே. (2)

சித்தியையுடைய சிற்றருள் குருவே
சிந்தையி லுறைந்ததை யருளும்
நித்தியமுங்கள் சந்நிதி வந்தோர்
நினைவுகளும் மகுபூலாம்
வெத்தியை வேன்றி வேன்றுதலாக
விரிஉட னேபுகள் பாடப்
புத்தியாய் வந்தேன் புகலுதர்க் கருளும்
புகள் ஒட்ட மன்னன் ஷெய்கொலியே. (3)

சீர்சிறப்புடைய கோடைமானகரில்
சித்தியா யர்ப்புதங் காட்டும்
பேர்பிற பல்யமுடைய மெய்க்குருவே
பெட்பு தாத்துஞ் சிபாத் தருளும்
ஊரினில் வருநோய் துன்பங்கடீர
உடயவனிடந் துஆவிரப்பீர்
ஆருமைப் போல உதவி இவ்வுலகில்
அருள் ஒட்ட மன்னன் ஷெய்கொலியே. (4)

சச்சிதா நந்தப் பதனிலே தந்து
சடுதியி லருள்புரிந் திடுவீர்
கச்சியில் சேர்ந்து கலக்க முறுது
காத்தருள் செய்பு மெங்குருவே
உச்சிமீ துறைந்த உள்ளமைப் பொருளே
ஊன்றியே வளைந்த தென்றருளும்
ஒச்சமாய் கேழ்க்கு முருனிலே தாரும்
ஒட்ட மன்னன் ஷெய்கு ஒலியே. (5)

கருனிலைக் காட்சி கண்ணிடை காட்டி
கருணை செய்தருளு மெங்குருவே
திருக்கலி மாவைத் தினமுறக் கண்டு
திருவடி காணவே வருளும்
அருமையாய் காத்து ஆண்டருள் செய்து
அகத்தினுள் ளருள் விளக்கேற்றி
ஒருனிலை காட்டி யுகந்தெனை யாளும்
ஒட்ட மன்னன் ஷெய்கு ஒலியே. (6)

மூன்று மொன்ருன முடிவில்லாப் பொருளே
முழிக்கெதிர் காணவே வருளும்
ஊன்றியே வளேந்த உள்ளமைப் பொருளே
உள்ளத்தில் காட்டியே யருள்வீர்
தோன்றுதலாக வெப்பொழு தினிலுந்
தோற்றவே வருள் புரிந்திடுவீர்
ஆன்றனுயகமே யருள்னிலே தருவீர்
ஒட்ட மன்னுன் ஷெய்கு ஒலியே. (7)

உள்ளமையான மெய்ப்பொருள் காட்டி
உறுதியாய் நல்லரு ளூட்டி
பிள்ளே என்றணேத்து பேணியே கார்த்து
பேரின்ப மெய்ப் பொருள் தாருந்
தள்ளேயின் முன்னே பிள்ளேபோல் கேட்டேன்
தனிப்பொரு ளின்னதென் றருளும்
வள்ளலே வந்து அருள் புரிந்திடுவீர்
ஒட்ட மன்னுன் ஷெய்கு ஒலியே. (8)

எவ்விதமான துன்பங்கள் வந்து
எங்கள்மீ தணுகிடா தாளுங்
கௌவ்வைக ளகற்றிக் கிருபை செய்திடுவீர்
காரணரே என்றன் குருவே
கூவ்வதின் னிலேயைக் குறித்து நீர்காட்டி
குவலேயந் தன்னிலே காரும்
அவ்வலின் னிலேயை யகத்தினுள் ளருள்வீர்
ஒட்ட மன்னுன் ஷெய்கு ஒலியே. (9)

முன்னிலே கண்டு முறையுடன் வாழ்க
முப்பொருள் காட்டியே ஆளும்
தென்னகர் கோட்டா றுள்ளவன் சொன்னுன்
ஷெய்கெனுஞ் ஸாலேயுமா னருளால்
மன்னவ னுதவி மானிலத் தோர்க்கு
மாப்பொரு ளறியவே யிசைத்தான்
அன்னெனும் பொருளே யகத்தினுள்ளருள்வீர்
ஒட்ட மன்னுன் ஷெய்கு ஒலியே. (10)

முற்றிற்று.

பாவாகாஸீம் மொலியுல்லாப் பதிகம்.

வித்துவதீபம் அருள்வாக்கி அப்துல் காதிறுப் புலவரவர்கள்

இயற்றிய

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

சீரோங்கிய வெண்ணித் திலத்தின்
திருவாரழகி னுருவார்ந்து
காரோங்கிய பொற்கவிகையினர்
கருணை நயினர் நபியி றசூல்
பேரோங்கிய நற்றவ நிலையின்
பிதிரா தொழுகுந் தென் கோடை
ஊரோங்கிய பாவா காஸீம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (1)

கசிந்து மனக் கண்ணகத் தடியார்
கண்ணீ ரொழுகக் கையேந்தி
சசியிற் றிருச் சந்நிதிமு னின்று
தயவா யிரக்கு மிரப்பை யெலா
நொசி வற்றிட வேற்ற வரவர்க
ளுக்க நிறைவே றிடப்புரியு
முசித முறும் பாவா காசீம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (2)

ஆக்க வழிக்க வல்ல வன்றன்
னடியார் தமது புண்ணோய்கள்
நீக்கக் கருணை விழிபுரிந்து
நிதியும் பயனு நிலத்துறவே
நோக்குங் கமையங் கடலனைய
நோன்றாட் பரவுஞ் சான்றோர்க்கே
யூக்கமருள் பாவா காஸீம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (3)

பற்று மலங்களற நீக்கிப்
    பரம நிலையின் சுடர் நோக்கி
கற்ற வழிஞர் திருவருளிற்
    கலந்து களிப்பா னந்தமுற
மற்றுங் கொடிய பவவினைகள்
    வாராத கற்ற வலிமை மிக்க
வுற்றதுணை பாவா காசிம்
    ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (4)

வாகையுறுந் தென்கோட் டாற்றில்
    வளரு முசுலீமா னோர்கள்
பாகை நிகர்த்த திருச் சமுகம்
    பரவி வாழ்த்தப் பலன் புரிவோர்
தோகை நடனமிடு பொழிலே
    சூழ்ந்து மணமே கமழ்ந்தகளி
யோகை வளர் பாவா காசிம்
    ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (5)

நீதி யுடையார் நெறி தவறு
    நேம முடையார் நித்தியமும்
சோதி தனையே தெரிசனிக்குஞ்
    சுத்த முடையார் துதியுடையார்
கோதி லமுதந் தனைத் தேக்கக்
    கொடுக்கு மிறையோன் திருமறையை
ஓதியுணர் பாவா காசிம்
    ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (6)

நச்சினவர் கண்ணிணை மணியாய்
    நவமே விளக்கும் பெருங்கடலாய்
மெச்சு மதுரகுண நிதியாய்
    மேலோ ரடைந்த தவமலையாய்
சச்சிதா னந்தன் கருணை
    தானே நிலைத்த தென்கோட்டை
உச்சிமணி பாவா காஸீம்
    ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (7)

எட்டி லெழுத வடங்காத
விறும்பூதி யற்று மெளியர்பிணி
யோட்டி மனச் சஞ்சலங்க ளெலா
மொன்று தகற்று முயர்தருவே
நாட்டிற் சிறந்த தென் கோடை
நடுவே முளைத்து ஞானமுதை
ஊட்டுந் தாய் பாவா காசிம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (8)

கதித்த பாவக் கறை யகற்றிக்
கமலா லயத்திற் குடியிருந்து
விதித்த பறுளாங் தொழுகை முறை
மேவிப் புவிவாழ் வினையிகழ்ந்து
துதித்த பெரியோர் தமையடுத்த
துன்பவிரு ணீக்குஞ் சுடரா
யுதித்தமணி பாவா காசிம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (9)

அப்துல் காதிர்ப் புலவனெனக்
காசான் ஷெய்கு சுலைமானின்
செப்ப மிகுந்த மனத்த விசிற்
றிகழ்ந்தங் கொளிருந் திருவிளக்கார்
கொப்பிற் கனிகள் கொய்து கவி
குதிகொண் டாடும் பொழிற் கோடை
ஒப்புமதி பாவா காசிம்
ஒலிசெஞ் சரணே சரண் மனமே. (10)

முற்றிற்று.

பதம்.

பல்லவி.

எங்கும் புகள் மிகுத்த தென்கோடை மானகரில்
ஏந்தல் வாவா காஸீ மொலி நேர் நேர் நேர்

அனுபல்லவி.

ஏகமாகவே கூடுவீர்
எல்லாம் படைத்த இறை அல்லாவி நற்கிருபை
எல்லார்க்குமே சொரிவான் கோன் கோன் கோன். (1)

தாலமேபுகள் மேலவர்
தாரை தனையுடைய பேர்க ளெல்லா ருங்கூடி
தற்போத முணரஎஜமான் மான் மான். (2)

வாது தீதுகள் னீக்குவார்
வாரா தகலுமொரு தீராத னேய்க ளெல்லாம்
வந்திடாது சிந்தை யருள்வார் வார் வார். (3)

நீதமருளு மெய் வேதியர்
நேர் நேர் னலந்தருவார் பார் பார் பிணியகலும்
நித்தனருள் வெத்தி முத்தி சேர் சேர் சேர் (4)

கால காலமுமே புகள்.
காத்திம் றசூல் நபியைத் தோத்திரஞ் செய்தே புகழ
காரண வேம்பதனைப் பார் பார் பார். (5)

வண்டன் துயரதை மாற்றுவீர்
வந்து அருள் புரியும் வள்ளல் பகீறு மன்னன்
வருசை முஹம்ம தொலி தான் தான் தான். (7)

நீதராங் கோடை யூரராம்
பாதமல ரருளும் தாதன் செய்கு சுலேமான்
பாக்கிய மருள் கண்கொண் டேனைப்பார் பார் பார். (8)

கத்தனரு ளுறும் வேதராம்
கன்னல் விளையுங் கோடை வத்தமன்னன் செய்கொலியே
சொன்ன சொல்லை யேந்தருளும் நீர் நீர் நீர். (9)

முற்றிற்று.

சதுரங்க பந்தம்.

சா	ர்	ங்	தே	னெ	ன	து	தா
வே	க	க்	ணீ	க	து	யே	வே
ய	மா	பூ	பா	ல	ஐ	ய	றி
வி	மே	த	ப	து	ச	வ	த
ள	ரு	மா	றா	க்	இ	ய	மா
வ	ல்	சொ	ணே	ண்	க	து	ம
சா	லி	ஹா	மா	ங்	த	ர்	த
யே	ணி	ம	கோ	ன்	தா	ஸ்	ம

ஆசிரியப்பா.

சாக பூபக்கர் மஸ்தான் கோமணியே
சாலிஹா மாந்தர் தமது கண்ணே சொல்,
வளரு மாறாக்கிய மாதவ சதுபத
மேவிய மாபூபால ஐயறிவே
யேது[illegible]ணீக்கவே சார்ங்தே னெனது
தா[illegible] ஐதுறா சொலியே.

முற்றிற்று.

சித்திர பந்த

					ம					
				வ	ஸ்	தே				
			யே	தி	த்	அ	யா			
		மை	யா	ய்	தா	ரு	மை	ய்		
	ரு	அ	வை	ளி	ஞெ	னு	யி	டை	ணி	
க	ரு	ணை	யே	அ	லி	பு	னி	லை	ச	ண்

வேறு.

கருணையே அலிபுனிலை, கண்ணிடையி னுஞெளிவை,
அருமையாய் தாருமைய்யா, அத்தியேவஸ்தே மஸ்த்தாஞெலி.

வித்துவ தீபம் அவர்கள் செய்த சாற்றுக்கவியாகிய

சித்திரக்கவி சதுரங்க பந்தம்.

மா	சு	லை	மா	ஞெ	லி	பூ	மா
சு	வ	நூ	போ	மா	யே	மே	சு
லை	ம	தி	த	ரு	தே	க	லை
மா	ய்	வா	ர	ம	சு	ய	மா
ஞெ	ன்	று	சே	ம	ல	தா	ஞெ
லி	ம	ம	தா	ம்	வு	ங்	லி
பூ	ணு	ங்	த	ரு	வே	எ	பூ
மா	பூ	லி	ஞெ	மா	லை	சு	மா

வெண்பா.

மாசுவலை மதிநூலை மாபோ தரவாய்
மாஞென்று சேமமரு மாஞெலியே—தேசுலவும்
தாமமலி பூணுங் தருவேயெங் தாயகமே
மாசுலைமா ஞெலிபூமா.

சாற்றுக்கவி.

கோட்டாறு மஹா வித்துவான் சதாவதானி தேவாமுர்தப்
பிரசங்கக் களஞ்சியம் ஸ்ரீலஸ்ரீ. கா-ப-செய்குதம்பி பாவலர்வர்கள்
இயற்றிய நேரிசை வெண்பா.

சீருந் தளையுஞ் சிதையிற் குறைகாணொன்
றுரும்பழிச்ச வறைந்தனனூற்—பாரிற்
றுலங்கு மருள்செய்கு சுலையுமா னென்று
மிலங்கும் ஷிபாமாலை யின்று.

இஃது

கோட்டாற் வித்துவ சிரோன்மணி சீரு செய்யி தபூபக்கர்
புலவர் சாகிபு ஒலியுல்லா அவர்கள் புத்திர பவுத்திரர்
கனம் மார்க்கப் பிறசங்கி

செய்கு மஹ்றூபு ஆலிம் சாகிபவர்க ளியற்றிய

அறுசீர் நெடிலடி யாசிரிய விருத்தம்.

நாட்டார் புகழும் மெய்ஞ் ஞான வாரியோடு தங்கப்
பாட்டலங்கார ஷிபாமாலை சித்திரக் கவியெவையுங்
கேட்டார் செவிவழி சிந்தையிர்ச் சென்று ஜியம் விளைக்கக்
கோட்டாறு ஷெய்குபாவா சுலையுமான் செய்தநரே.

முற்றிற்று.

விளம்பரம்.

திருபகுதாதிலுதித்த ஷாஹுபூபக்கர் மஸ்தான் சாஹிபு ஒலியுல்லா அவர்களின் மகமகவாயுதித்த கோட்டாறு மெய்ஞ்ஞான சொரூபராகிய காமில் முகம்மல் ஆஷிகு ஆரிபுபில்லாகி காமிலொலியுல்லா செய்கு முஹியித்தீனுல் காதிரிய்யி ஸாஹிபவர்களின் புத்திரசிகாமணியும் மெய்ஞ்ஞான தேசிகரும் ரெத்தினவாருதியுமாகிய காமிலுஷ்ஷுஹூது அல் ஆரிபுல் உஜூது ஹலறத்து செய்குபாவா செய்கு சுலைமானுல் காதிரிய்யி சாஹிபவர்கள் அருள்ஞான முழுகி அனேககாலம் கல்வத்திலிருந்தும் காடுமலை குகைகளிலிருந்தும் முத்தெடுத்து வுத்துதெழிந்து பரமஞான நிஷ்டையிலிருந்து பாடிய திருமெஞ்ஞான ஸாகரத்திருப்பாடத்திரட்டு.

ஷை நூலில் அமைக்கப்பட்ட பாடல்களின் அட்டவணை.

		பாட்டு.
மெஞ்ஞான வினாவிடை தாய்மக ளேசல்	...	100
மெஞ்ஞான அலங்காரப் புஞ்சம்	...	300
நவமணி மாலைப் பரிபூரணம்	...	9
மெஞ்ஞான ஆநந்தக் களிப்பு	*	24
மெய்க்குருக்கும்மி	*	41
முனாஜாத்துல் முஸ்தஜாபு	*	41

திருப்பாடல்கள் அட்டவணை

அஹதத்து மாலை ... 55
உஹதத்து மாலை ... 48
வர்ஹிதிய்யாமாலை ... 68
ஞானக்கண் மாலை ... 108
ஞானப்பெண்மாலை ... 81
அல்லாகூப் பதிகம் ... 10
றகுமான் பதிகம் ... 10
அல்ஹம்து லில்லாப்பதிகம் ... 10
றப்பில் ஆலமீன் பதிகம் ... 10
ஸமதான வாப்பதிகம் ... 10
அஹதான வாப்பதிகம் ... 10
தாபரப் பதிகம் ... 10
பராபரப் பதிகம் ... 10
பரிபூரண ஆண்டவாப் பதிகம் ... 10
எங்கோன் பதிகம் ... 10
வேந்துப் பதிகம் ... 10
கோவேப் பதிகம் ... 11
கண்மணியே என்ற பதிகம் ... 10
மாமணியே என்ற பதிகம் ... 10
காப்புப் பதிகம் ... 10
றசூலுல்லாவே என்ற பதிகம் ... 10
அஹ்மது நபியே என்ற பதிகம் ... 11
குருநபி நாயகமே என்ற பதிகம் ... 10
தாஸீமே என்ற ப்திகம் ... 10
சோதிப் பதிகம் ... 10
இறசூலே யென்ற பதிகம் ... 10
பாலில் ஷாகு ஒலியுல்லாப் பதிகம் ... 10
அப்துல்லா பாதி யொலிப் பதிகம் ... 10
ஹமீதொலி நாயகமே என்ற பதிகம் ... 10
கண்டி செய்யிது ஷிஹாபுத்தீன் ஒலிப்பதிகம் ... 10
பள்ளத்தூர் செய்யிது முஹம்மது ஒலிப்பதிகம் ... 11
கோட்டாறு வேம்படிப்பள்ளி திருக்காரணப் பதிகம் * 10
பாவாகாசீ மொலியுல்லாப் பதிகம் * 11
பகீறு மன்னன் முஹம்ம தொலிப் பதிகம் * 11
ஒட்ட மன்னன் செய்கொலிப் பதிகம் * 10
செய்கு ஐதறூ சொலியுல்லாப்பதிகம் ... 10
ஹாஜிகட்டை செய்கு முஹம்மதொலிப் பதிகம் ... 10
பேறு முனாஜாத்து * 11
திருத்தோத்திர குருவடி விளக்கம் ... 51
மெஞ்ஞான நெஞ்சொளிவு மாலை ... 55

* இந்த பூ ரேகையுள்ள பாடல்களை அச்சிட்டு வெளியாகிவிட்டது,

திருப்பாடல்கள் அட்டவணை

திருத்தோத்திர மாலை ...	64
மெஞ்ஞான இரட்டையாசிரியு குருவடி விளக்கம் ...	25
மெஞ்ஞான தங்கப்பாட்டு மாலை *	156
மெஞ்ஞானப் பஃறொடை ...	108
றகுமானே என்ற கண்ணி ...	68
பராபரமே என்ற கண்ணி ...	55
நிராமயமே என்ற கண்ணி ...	51
எந்நாளோ என்ற கண்ணி ...	31
தாபரமே என்ற கண்ணி ...	25
எக்காலக் கண்ணி ...	66
திருக்கலியாண வாழ்த்து மாலை ...	29
ஷலாகுத்தின் அப்பாகாரண மாலை ...	24
திருத்தற்கலை யிரட்டகமாலை ...	16
கோட்டாறு மெய்ஞ்ஞானி ஸாகிபொலி வாழ்த்து மாலை	25
கன்லைல் கருமாத்து மாலை ...	252
ஹாஜிபாவா ஒலியுல்லா காரண வாழ்த்து மாலை ...	25
அலிமன்னு செய்கொலி யுல்லாபீர் மாலை ...	25
ஷாகுஜமால் ஒலியுல்லா பதிகம் 2-க்கு ...	21
பாவா பகுறுத்தீன் ஒலியுல்லாப் பதிகம் 2-க்கு ...	20
சின்னமுத்து வாப்பா ஒலியுல்லா காரணமாலை ...	25
சிக்கந்தர் பாட்சா காரணமாலை * ...	24
பதுரீங்கள்பேரில் முனஜாத்துமாலை ...	55
திருபகுதாது சாகபூபக்கர் மஸ்தானொலி காரண மாலை	55
அஹ்மதிய்யா திருக்காரண மாலை ...	108
ஷிபா மாலை *	70
மெஞ்ஞான பதக்கொத்து ...	66
விநோத சித்திரக் கவிக்கொத்து ...	51

இந்த அருமையான பாடலை அனேக ஆரிபீங்களும் உலமாக்களும் இலக்கண வித்வ சிரோன்மணிகளும் பார்வைசெய்து அச்சிட விரும்பிய படியாலும் இன்னும் அனேக முரீதீன்கள் தற்சமயம் அச்சிடும்படி விரும்பி முயற்சித்திருப்பதாலும் தெளிவான எழுத்தில் திறமான கிளேஸ் கடிதத்தில் தற்சமயம் அச்சிடுவதால் வேண்டும் நேயர்கள் முந்திக்கொள்வது அவசியம் இதின் விலையை முடிந்தால் தெரிவிக்கப்படும். வேண்டுவோர்கள் நமக்கெழுதி தெரிந்துக் கொள்ளலாம்.

அல்லது ஷை நூல் ஆசிரியரவர்களாகிய ஹலரத்து ஷெய்குபாவா ஷெய்குகல்லைமானுல் காதிரி சாஹிபவர்களிடமும் எழுதி தெரிந்துக்கொள்ளலாம். இங்ஙனம்,

☞ வா-மு-முஹம்மது யூசுபு லெப்பை

அண்டு கம்பேனி, நெ. 68 மூர் தெருவு, மதராஸ்.

186112

கற்பமாலை.

இதில் பெண்கள் குழந்தை பெறுவதற்கு ஆண்டவனிடத்தில் மன்றாடுவதும் அன்பியாக்கள் அவுலியாக்களுக்கு நேற்சை நேமிசம் நோம்பு ஸகாவத்து தானதர்மம் முதலிய விஷயங்கள்செய்து ஆண்டவன் குதறத்தினால் குழந்தையை அமலாகி அக்குழந்தை வயற்றில் தங்கினநாள்முதல் தாயிக்கு யேற்படும் வழுமைகளைகுறித்தும் தாயிக்கு கோட்டி முதலிய விஷயங்கள் உண்டாய் ஆகாரஞ் செல்லாமல் சில தீன்வஸ்துக்களின் பேரில் பிறியமுண்டாய் கேட்பதும் ஒவ்வொருமாதத்திலும் குழந்தைக்கு அவயவங்கள் உற்பத்தியாகும் விஷயங்களையும் அலிபுபே 29 ஹறுபைக்கொண்டு ஒவ்வொரு உறுப்புகளை அமைப்பதும் றூகை அஞ்சாமாதத்தில் கொடுப்பதும் இப்படி பத்துமாதத்துக்குள் நடக்கும் விஷயங்களையும் இன்னும் உலக இயற்கையான நடத்தைகளை ஒவ்வொன்றையும் யாவர்களுக்கும் தெரியும்படி விபரமாக பாடி இருக்கிறது இத்துடன் பாலர்கள் தாலாட்டும் சேர்ந்திருக்கிறது. இந்நூலை படிக்கப் படிக்க கேழ்ப்பவர்களுக்கு இன்பமாகவும். படிப்பவர்களுக்கு படிக்கப் படிக்க பிறியமாகவுமிருக்கும். பெண்கள் கெற்பமுண்டாய் பெறுங்காலங்களில் அச்சூலிகள் வருத்த மடைந்தால். வழுமையாக ஓதிவரும் முனாஜாத்தும் இத்துடன் பஞ்சரெத்தின ஆனந்தக் களிப்பும் சேர்ந்திருக்கின்றது. பஞ்சரெத்தின ஆநந்தக்களிப்பில் ஈமான் இஸ்லாமுக்காக வேண்டிய அஞ்சும் ஆறும் பதினொரு காரியங்களைப்பற்றி யாவர்களுக்கும் தெரியும்படி விபரமாக பாடியிருக்கிறது.

இஃது.

கோட்டாற்றில் பிறந்து காயற்பட்டணத்திற் குடிபதியாயிருந்து மேலப்பாளயத்தி லடங்கிய மெய்ஞ்ஞான சொரூபரான காமில் முகம்மல் ஆஷிகு ஆரிபுபில்லா ஹாஜி செய்கு அப்துல் காதிறுலெப்பை ஆலிம் சாஹிபவர்களின் செல்வப்புத்திரர் ஹலறத்து ஹாஜி முஹம்மது அப்துல்லா லெப்பை ஆலிம் சாஹிபவர்களியற்றியது. இந்நூலை அநேக நேயர்கள் செந்தமிழிலும் அறபுத்தமிழிலும் கேட்டுவிரும்பிய படியால் சுத்தமான பிறுதி தெளிவான பதிப்பில் குறைந்த காப்பி அச்சிட்டிருப்பதால் வேண்டும் நேயர்கள் முந்திக்கொள்வது அவசியம். இதன் விலை அணா-3 அறபுத்தமிள் அணா-4

பெற்றுக்கொள்ளுமிடம்.

மருதூம் பாவாகாசீம் தரகனூ ரவர்கள்,

பெருமாள் குளந்தெருவு, கோட்டாறு.

இவ்விலாசத்தாரிடமும் மதுராவிலுள்ள எல்லா வி-பி. வியாபாரிகளிடமும் ரொக்கத்திற்கும் வி-பி. மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

புஸ்தக வியாபாரம் ✻ நாட்டு ஜவுளி வர்த்தகம்.

சகாய விலைகள்.

விளம்பரம்.

எல்லாவித அறபுத்தமிழ் கிதாபுகள், குறா ஆன் ஷரீபுகள் செந்தமிழ் நாவல்கள் தமிழ்புத்தகங்கள், றப்பர் முத்திரைகள் உயர்வான செண்டுகள் அத்தர் முதலிய வாசனைத்திரவியங்கள், நாட்டு ஜவுளி கைலி தினுசுகள், மருந்து வகைகள், ஜர்மன் சில்வர் நகைகள், முதலியவைகளும், தேவையானவர்கள் ரொக்கத்திற்கும், வி. பி. போஸ்டு மூலமாகவும் நமக்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இன்னும் நம்மிடத்தில் தயாரில்லாத எந்த சாமான்களுக்கெழுதினாலும் அவைகளை நாம் வாங்கி மதுராவில் ஏற்படும் அசல் கிரயத்திற்கு அனுப்பப்படு[illegible] இன்னும் மதராஸிலுள்ள வி. பி. கம்பனி வியாபாரிகளின் கேட்லாக்கிலுள்ள விலைகளை கண்டெழுதினாலும் நாம் அதது விலைகளிலுள்ள சரக்குகளை அவ்விலைகளுக்கே அனுப்பிக்கொடுக்கப்படும்.

நமது கம்பேனியில் யேற்படுத்திய புதிய கேட்லாக் தேவையான கனவான்கள் தமது விலாசங்களை விபரமாக எழுதி தெரிவித்தால் இனாமாயனுப்பிக் கொடுக்கப்படும்.

மொத்தமாக வாங்கும் வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். லட்டர் எழுதி தெரிந்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

வா. மு. முஹம்மது யூசுபு லெப்பை,
அண்டு கம்பெனி,
நெ. 68, மூர் தெருவு, முத்தியால்பேட்டை,
மதராஸ்.